"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால்
அதைக் காக்கிறவன் கண்விழிப்பதுவியர்த்தம்"

# காவலன்

தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300.
Registered at the Ceylon G. P. O. as a Newspaper

விபூதித் திருநாள்
28 - 2 - 68
புதன்கிழமை
சுத்தபோசனம்— ஒருசந்தி

93-ம் புத். | யாழ்ப்பாணம், 1968-ம் ஞு மாசி மீ 24-ந்உ சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 8-ம் இல.

# பிரதம மந்திரியின் விண்ணப்பத்துக்கு எமது பதில் யாது?

இவ்வருட சுதந்திரதினத்தன்று பிரதம மந்திரி திரு டட்லி சேன நாயகா அவர்கள் நாட்டின் பொருளாதார நெருக்கடியைக் குறைப்பதற்கு ஒவ்வொருவரும் உதவ முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதற் கிணங்கப் பலரும் பலவிதத்தில் உதவ முன்வந்திருக்கின்றனர். கமக்காரர் உணவு விஷயமாய் நாடு சுய தேவைகளைப் பூர்த்தி செய்யத் தம்மாலானவாறு உதவ வாக்களித்திருக்கின்றனர். அவ்வாறே நெசவுத் தொழிலாளரும். இது போலவே பல வேலை அகங்களிலும் உள்ளவர்கள் சில மணித்தியாலங்கள்கூட வேலைசெய்து அரசாங்கத்தின் வேலைகளைக்குறைக்க முன்வந்திருக்கின்றனர். இவை யாவும் தேசபக்தர்களின் செயல்களாகும். நாம் ஒவ்வொருவரும் சிந்தனைசெய்து எவ்வாறு எமது நாட்டுக்கு இத்தருணத்தில் உதவலாமென முடிவுசெய்யவேண்டும்.

## மொறிஸ் கெனடியின் நம்நாட்டு நினைவுகள்

சென் வின் சென் டிபோல்சபையின் தூதுவராக நமது நாட்டுக்கு அண்மையில் விஜயஞ் செய்த மொறிஸ் கெனடியவர்கள் இலங்கைப் பத்திரிகை நிருபர்களுக்கு நமது நாடுபற்றித் தமது நினைவுகள் சில கொடுத்திருக்கிறார்.

● தனியார் பாடசாலைகளைப் பற்றிக் கூறுகையில் இங்கு நடப்பதில் உள்ள அநீதியைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். தமது நாடாகிய அயர்லாந்தில் சிறுபான்மையினரான புரொட்டஸ்தாந்தர் பள்ளிக்கூடங்கள் நடத்த அரசாங்கம் பணஉதவிபுரிந்து வருவதை நமது நாடு மனதில் வைத்திருத்தல் நலமென்றார்.

● நமது நாடு முன்னேறுவதற்குக் கடவுளால் ஆசீர்வதிக்கப் பட்ட பூமியென்றுகூறி, பலவகைகளில் முன்னேற்றம் இன்னும் தொடங்காதிருப்பது துக்கத்துக்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## காலம் விரைந்துசெல்கின்றது

உலக கிறிஸ்தவசபையினர் பின்லாந்துதேச ஹெலனிஸ்கி நகரில் அண்மையில் ஒன்றுகூடியபோது பொதுக்காரியதரிசி டக்றர் பிளேக் அவர்கள், "உலகம் ஒன்றிக்காவிடின் விரைவில் தன்னையே நிர்மூலமாக்கும் சக்திகள் தோன்றவிருக்கின்றன" என்றார். மேலும் அவர் தொடர்ந்து கூறியதாவது: "கிறிஸ்தவ சபைகள் ஒற்றுமைப் பாதையில் முன்னேறும்வேகம் போதாது எனச் சிலரும், மிகவிரைவு என வேறு சிலரும் கூறுகின்றனர். எனினும் ஒற்றுமை காணுமுன் பல முக்கிய கருமங்களில் அபிப்பிராய பேதங்கள் அகற்றப்படவேண்டும். இது நடைபெறுமளவும் காத்திராது அபிப்பிராயபேதமற்ற கருமங்களில் தோளொடுதோள்நின்று கருமமாற்றுவதே வழி" என்றார் டக்டர் பிளேக் அவர்கள்.

## மேற்கு ஜேர்மன் தலைவர் கீசிங்கர் பாப்பரசரைத் தரிசித்தார்

சென்ற வாரம் வத்திக்கானில் மேற்கு ஜேர்மன் தலைவர் கிசிங்கர் பாப்பரசரைத் தரிசித்தபோது இரு முக்கிய கருமங்களைப்பற்றி இருவரும் கலந்து ஆலோசித்துக் கொண்டனர். அவை:

1. போலாந்து, மேற்கு ஜேர்மனி எல்லைப்புறப் பிரச்சினை.

2. மேற்கு ஜேர்மனியில் பல பிரதேசங்களிலும் புகுத்தப்படும் புதிய கல்வித்திட்டம்.

புகுத்தப்படும் புதிய கல்வித் திட்டங்களின் அம்சங்களிற் சில 1933-ம் ஆண்டு ஜேர்மனியுடன் வத்திக்கான் செய்துகொண்ட உடன்பாட்டுக்கு முரணானதென் பதைப் பாப்பரசர் விளக்கினார்.

திரு. கீசிங்கர் அவர்கள் மத்திய அரசாங்கம் இதுபற்றி அதிகாரமின்றி இருக்கும் நிலைமையைச் சுட்டிக் காட்டினார்.

## பிரான்சுதேச அதிசிறந்த பத்திரிகை நிருபர் குருவாகின்றார்

பிரான்சுதேசத்தில் பெரும் கீர்த்தி வாய்ந்த பத்திரிகை நிருபரும் எழுத்தாளருமாகிய திரு. பொலியே என்பவர் வருகிறவருடம் தமது 60-வது ஆண்டு பராயத்தில் குருப்பட்டம் பெற இருக்கிறார் இவர் சிறந்த கல்விமானாகவும் ஏற்கனவே தத்துவ சாஸ்திர, வேதசாஸ்திர பட்டங்கள் பெற்றிருப்பதாலும் குருமாணவ படிப்புகள் மிகக் குறைவாகவேஇருக்குமென எதிர் பார்க்கப்படுகிறது. அவரது விருப்பத்தின்படி, வறியவர் மத்தியில் இவர் தொண்டு செய்ய ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

## கருதினல் கிறேசியாஸ் அடிகளாரின் அறிவுரை

"ஒரு குடும்பத்துப் பிள்ளைகளைப்போல, சாதி, இன, வகுப்பு வித்தியாசங்களின்றி நம் நாட்டுக் கத்தோலிக்கர், பிறருக்கு ஓர்எடுத்துக்காட்டாக விளங்கவேண்டும். நாம் ஒரு பிதாவின் பிள்ளைகளாய் இருப்பதால் எமது வாழ்வில் சகோதரத்துவம் தொனிக்க வேண்டும்". இவ்வாறு சென்ற வாரம் இந்திய கருதினல் கிறேசியாஸ் அடிகள் இந்திய கத்தோலிக்கசங்கத்தில் கூறினார். மேலும் அவர் தொடர்ந்து கூறியதாவது:

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## இங்கிலாந்தில் கத்தோலிக்கர்

பெரிய பிரித்தானிய எல்லையில் சென்றவருடம் திரட்டப்பட்ட புள்ளிவிபரங்களின்படி அப்பிரிவுக் கத்தோலிக்கரின்தொகை 40,000 பெயரினால் கூடி இருக்கிறது. எனினும் பிறசமயத்திலிருந்து கத்தோலிக்கராகுபவரின் தொகை இவ்வருடமும் குறைவாகவே இருக்கின்றது. சென்றவருடம் வளர்ந்தோர் கத்தோலிக்கரான தொகை 9,121. இது முந்திய வருடத்திலும்விட 1,187 குறைவாகும்.

# நீ தயாராய் இருக்கின்றாயா?

— சாமுவேல் பெனடிக்ற்

அலைகடலின் நடுவேசென்றுகொண்டிருந்த அந்தக்கப்பலுக்கு எதிர்பாராத சோதனை வந்துவிட்டது. ஆழ்ந்தசமுத்திரத்தினுள் வளர்ந்திருந்த கூரியகற்பாறில் கப்பலின் முன்னணியம் மோதிச் சேதமடைந்துவிட்டது.

பிரதம கப்பித்தான் உதவிகோரிக் கம்பியில்லாத் தந்திமூலம் குரலை யெழுப்பினார். எதுவித பயனுமில்லை. சிறிது சிறிதாகக் கப்பல் கடலுக்கு இரையாகிக் கொண்டிருந்தது.

ஆபத்துக்காலத்தில் உதவுவதற்கென கப்பலில் சிறுசிறு படகுகளை வைத்திருப்பார்கள் அல்லவா? இந்தக் கப்பலிலும் இரு சிறுபடகுகள்இருந்தன. அப்படகுகளைக் கடலில் இறக்குமாறு தலைவர் சிப்பந்திகளுக்கு உத்தரவிட்டார்.

இருபடகிலும் இருபத்திநான்குபேர் மட்டுமே ஏறிக்கொள்ளலாம். கப்பலிலோ சிப்பந்திகளைவிட 210பிரயாணிகள் இருந்தனர். அவர்கட்குள் இருபத்துநான்குபேரை அதிர்ஷடச் சீட்டின்மூலம் தெரிவுசெய்தனர் அதிகாரிகள். தெரிவு செய்யப்பட்டவர்கட்கு அனுமதிச்சீட்டு வழங்கிப் படகில்ஏறுமாறு கட்டளையிட்டார் கப்பற்தலைவர். அவர்களும் மகிழ்ச்சியோடு ஏறிக் கொண்டிருந்தனர்.

ஆஞ்சலோவும் அவர்களிலொருவர். அவர் படகைநோக்கிச் செல்லவில்லை. விரைவாகக் கப்பலின் இரண்டாவது தளத்துக்குச்சென்று ஓர்அறைக்குள் நுழைந்தார். அங்கு..... 22வயது நிரம்பாத [illegible] விழித்துக் கொண்டிருந்தான்.

அமலா, இங்கேபார். பிரயாணம் தொடங்குவதற்கு முன்பாக நல்ல பாவசங்கீர்த்தனம் செய்துளதற்கும் தயாராகவேவந்தேன். நீயும்மரிப்பதற்குத்தயாராய் இருக்கிறாயா? என வினவினார்.

அமலன் அவரது அக்காவின் புதல்வன். மரணம் வயதுமுதிர்ந்த பின்னர்தான் வரும்; அப்போது பார்த்துக் கொள்ளலாம்என எண்ணி அசட்டையாய் இருப்பவன். தனது பயங்கரநிலையை எண்ணி விம்மிவிம்மி அழுதான்.

அழாதே அமலா. எனக்கு அனுமதிச்சீட்டுக் கிடைத்திருக்கிறது. அதை உன்னிடம் தருகிறேன். தப்பிப் பிழை. நான் மரணத்துக்குத் தயாராயிருக்கிறேன். நீயும் இனிமேல் எப்போதும் தயாராயிருஎன அனுமதிச் சீட்டை அமலனிடம் வழங்கினார் ஆஞ்சலோ.

மரணம் கள்ளனைப்போல் வரும். கள்ளன் வருவதை வீட்டுக்காரன் அறிவானாயின் தகுந்த எச்சரிக்கையுடன் இருப்பான். ஆயின் கள்ளனோ எதிர்பாராத தருணத்திலல்லவா வந்துவிடுகிறான். எனவே என்றுமே நாம் தயாராயிருத்தல் வேண்டுமென்கிறார் கிறீஸ்துநாதர். சத்திய திருச்சபை அடிக்கடி நமக்கு மரணத்தை ஞாபகமூட்டுவது இதற்காகவே. சிறப்பாகத் தபசுகாலத்தில் அது எம்மை எமது எதிர்காலம் பற்றிச் சிந்திக்கவைக்கிறது.

விபூதித்திருநாள் வருகிறது. குருவானவர், நெற்றியில் சாம்பரினால் சிலுவையடையாளம் வரைந்து மரணம்பற்றியே நினைவுறுத்துகிறார். வாசக நேயர்களே நீங்களும் தயாராய் இருக்கிறீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவ ஒற்றுமை

ஒவ்வோர் ஆண்டும் தை 18-ம் தேதி முதல் 25-ம் தேதிவரை கிறிஸ்துவ சபைகளின் ஐக்கியத்திற்காக எட்டு நாட்கள் பக்தி முயற்சி கொண்டாடும் சிறந்தவழக்கம் நம்மவரிடையே இருந்து வருகின்றது. சில பங்குகளில் கடைசி நாளில் பொதுக்கூட்டங்கள் நடத்தி, கிறிஸ்தவ ஒற்றுமை பற்றிய சொற்பொழிவுகளும் நடத்துவது உண்டு. பிரிந்துபோன சகோதரர்கள் தங்கள் தவறை உணர்ந்து, தாங்கள் விட்டுச்சென்ற தந்தையின் இல்லத்திற்குத் திரும்பவேண்டும் என்ற கருத்திற்காகவே செபிப்பது வழக்கம்.

திருச்சபை துவங்கிய காலத்திலிருந்தே பிளவுகள் இருந்து வந்துள்ளன. கொரிந்தி, கலாத்தியா போன்றஇடங்களில் ஏற்பட்ட பிளவுகளை புனிதசின்னப்பர் கண்டித்திருப்பதைக் காண்கிறோம் (1கொரி. 11 : 18–19 ; கலா. 1 : 6–9). ஆனால் பிந்திய நூற்றுண்டுகளில் கருத்து வேற்றுமையினால் ஏற்பட்ட மிகப்பெரிய பிளவுகள் திருச்சபையின் ஒற்றுமையை மிகவும் பாதித்தன. 11-ம் நூற்றுண்டில் ஏற்பட்ட பெரிய பிளவினால் கிறிஸ்துவ உலகு மேற்கு–கிழக்கு என்று இரண்டாகப் பிரிந்தது. பின்னர் மேற்கு நாடுகளில் 16-ம் நூற்றுண்டில் ஏற்பட்ட 'மதச் சீர்திருத்த இயக்கத்'தின் விளைவாக, கத்தோலிக்க சபையினின்று, ''புரட்டஸ்டாண்டு'' சபைகள் பிரிந்தன.

கிறிஸ்து நிறுவிய திருச்சபை ஒன்றே ஒன்றுதான். ஆனால் இன்று, பிரிந்து சென்ற ஒவ்வொரு சபையுமே தன்னை கிறிஸ்துவின் உண்மையான சபைஎன அழைத்துக்கொள்ளுகிறது. திருச்சபையில் காணப்படும் பிளவு, ''கிறிஸ்துவின் விருப்பத்துக்கு முரண்பாடானது. தவிரவும் உலகிற்கு அது இடறலாகவும் அமைகிறது. படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் போதிக்கும் புனித அலுவலுக்கும் தீமை விளைவிக்கிறது'' (கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய தீர்மானத் தொகுப்பு, எண். 1).

பிளவு ஏற்பட்டதன் காரணங்களை அறிந்து, அவற்றை அகற்றி மீண்டும் ஒன்றிப்பை ஏற்படுத்த திருச்சபை முயன்று வந்துள்ளது. திரிதெந்தீன் பொதுச்சங்கம், 16-ம் நூற்றுண்டில் ஏற்பட்ட பிளவைச் சீர்ப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு, திருச்சபையில் மறுமலர்ச்சியைப் புகுத்த விழைந்தது. பாப்பரசர் 13-ம்சிங்கராயர் காலத்திலிருந்தே ஒற்றுமை இயக்கம் பரவஆரம்பித்தது. எனினும், ஒற்றுமைக்கான முயற்சி செய்யவேண்டியது பிரிந்து சென்றவர்களே ; அவர்கள்தான் தங்கள் தவறுகளை உணர்ந்து, திருந்தி, தாய்ச்சபையிடம் திரும்ப வேண்டும் என்ற எண்ணம்தான் மேலோங்கி நின்றது.

ஆனால், பாப்பரசர் 23-ம் அருளப்பர் காலத்திலிருந்து, இவ்வியக்கத்தில் புதியதொரு திருப்பம் ஏற்பட்டது. பல நூற்றுண்டுகளாக பிரிந்திருப்பவர்கள் கூடுவது எளிதல்ல. அவர்கள் உள்ளத்தில் ஆழமாக வேர் இட்டிருக்கும் விரோத மனப்பான்மை அழிய வேண்டும், பகைமையுணர்வு மறைய வேண்டும், இருசாராரிடமும் பிறர் மட்டில் உண்மையான அன்பு மலர வேண்டும். எல்லோருமே மீட்பராகிய யேசுக்கிறிஸ்துவை இறைமகனாக ஏற்றுக்கொள்ளுபவர்கள் ; கிறிஸ்தவன் எனும் பெயரில் பெருமை கொள்ளுபவர்கள் ; தூயஆவியிலும், நீரிலும் திருநீராட்டப் பெற்றவர்கள். எனவே தான் பகைமை நீங்கி, உறவு வளருவதற்கு முதற்படியாக, ''நாம் ஒருவர் ஒருவரை அன்பு செய்வோம் ; இருவரும் ஒரே உண்மையைக் கண்டுணரும்வரை ஒருவர் ஒருவரை அன்பு செய்துகொண்டே இருப்போம்'' எனக் கூறிச் சென்றார்.

சொல்லோடு நின்று விடாமல் தான் சொன்னதைச் செயலிலும் காட்டினார். பாப்பரசராகப் பதவியேற்ற ஒரு சில மாதங்களுக்குள்ளேயே கிறிஸ்தவ ஒன்றிப்பை முக்கிய நோக்கங்களில் ஒன்றுகக்கொண்ட பொதுச் சங்கத்தைக் கூட்டுமாறு அழைப்பு விடுத்தார். அப்பொதுச் சங்கத்தில, பிரிந்துபோன சபைகளின் பிரதிநிதிகள் பார்வையாளராக அமர்ந்து, தீர்மானங்களில் ஒற்றுமைக்கு அடிகோலும் முறையில் நிறைவேற்றப்படுமாறு செய்தார். 'கிறிஸ்தவ ஒன்றிப்புச் செயலக'த்தையும் ஏற்படுத்தினர். வரலாறு கண்டிராத முறையில், பிரிந்த சபைத்தலைவர்களோடு பேச்சு வார்த்தைகள் நடத்தினர்.

பரி. தந்தை 6-ம் சின்னப்பரும் அவர் வழிநடந்து, பிரிந்தசபைத்தலைவர்களையும் பல முறையும் சந்தித்துப் பேசியதன் விளைவாக விரைவில் ஒற்றுமை ஏற்படலாம்என்ற நம்பிக்கை கிறிஸ்தவ உலகில் துளிர்த்துள்ளது.

இவ்விரு பாப்பரசர்களின் கருத்தையே பொதுச் சங்கம், 'கிறிஸ்தவ ஒன்றிப்பு'பற்றி வெளியிட்டுள்ள தீர்மானத் தொகுப்பும் வலியுறுத்துகிறது. இத்தீர்மானத் தொகுப்பு, ஒன்றிப்பு, இயக்கத்திற்குப் போராதவு அளிப்பதோடு, அது பற்றி கத்தோலிக்கருக்கு சிறந்த திட்டங்களையும் அளிக்கிறது. 1963-ல் எருசலேம் சென்று அங்கு பிதாப்பிதா அத்தனகோரஸ் என்பவரைச் சந்தித்த பொழுது, ''எவ்வகையிலேனும் நாங்கள் இப்பிரிவினைகளுக்குக் காரணமாயிருந்தால், தாழ்மையுடன் இறைவனின் மன்னிப்பைக் கோருவதோடு எங்களால் புண்பட்ட எங்கள் சகோதரரின் பொறுத்தலையும் வேண்டுகின்றோம்'' என்று பாப்பரசர் 6-ம்சின்னப்பர் கூறியதன் கருத்தை பொதுச்சங்கம் வலியுறுத்துகின்றது. ''இப்பிளவுகளுக்கு எப்போதுமே இருதிறத்தாரும் குற்றவாளிகளே. இப்போது இத்தகைய பிரிந்த சமூகங்களிலே பிறந்து, கிறிஸ்தவ விசுவாசத்தில் ஊன்றியிருப்பவர்களைப் பிரிவினைக்காக நாம் குற்றம் சாட்டக்கூடாது.''(கிறிஸ்தவ ஒன்றிப்பு : எண் 3) என்ற சங்கத்தின் வார்த்தைகள் நம் கண்களைத் திறக்கவேண்டும்.

பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் இன்று கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான முயற்சிகள் பலவிடங்களிலும் நடைபெற்று வருகின்றன. எனினும் இது எளிதான ஒரு செயல் என்று எண்ணிவிட முடியாது. விசுவசிக்க வேண்டிய சத்தியங்கள், வழிபாட்டு முறைகள் திருவருட்சாதனங்கள், ஆட்சிமுறை, குருத்துவம், பலி–இவை போன்ற முக்கியமான காரியங்களிலேயே கருத்துவேறுபாடுகள் சீர்ப்படுத்தப்பட வேண்டும். எனவே இன்று, நம்மைப் பிரித்து வைக்கும் விஷயங்களையும், எல்லா சபைகளுக்கும் பொதுவான அம்சங்களைப்பற்றிச் சிந்திப்பதனால் கருத்து வேற்றுமைகள் குறைவதற்கு ஏதுவாகும்.

திருச்சபையில் பிளவு ஏற்படுவதற்கு எப்போதுமே காரணங்கள் இருந்திருக்கின்றன. அன்றைய திருச்சபையின் வாழ்க்கை முறையிலேயும் சிறப்பாக வழிபாட்டு முறைகளிலேகண்ட சில குறைகளை நீக்கவே மார்ட்டின் லூத்தர் 'மறுமலர்ச்சியை' ஆரம்பித்தார். ஆனால், அதுவே திருச்சபையில் பெரும்பிளவுஏற்படக் காரணமாயிற்று. திருச்சபையின் வாழ்க்கை முறையில், ஆட்சிமுறையில், வழிபாட்டு முறையில் சுருக்கமாகக்கூற வேண்டுமானால் எங்கெங்கே மனிதனின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறதோ, எங்கெங்கு நாடுகளின் கலாச்சாரத்தோடும், மனிதகுலத்தின் பல[illegible] ம் தொடர்பு [illegible] செயல்பட வேண்டியிருந்ததோ அங்கெல்லாம் குறையிருந்தது. ஏனெனில் மனிதன் குறையுள்ளவன். ஒரு குறிப்பிட்ட நூற்றுண்டின் மனிதனின் தேவையை நிறைவுசெய்தவை, இன்னெரு நூற்றுண்டில் நிறைவு செய்ய முடியாததாக, தேவையற்றதாக, ஏன் தீமை விளைவிப்பதாகவும் இருக்கலாம். இவற்றில் காலத்திற்கேற்ற மாற்றங்கள், மறுமலர்ச்சி அவசியமாகும். இந்த மாற்றங்கள் காலத்திற்கு ஏற்ற முறையில் நடைபெருமல் இருந்ததினால், அதிருப்தி கொண்ட சிலர் 'புரட்சி' செய்து திருச்சபையை விட்டுப்பிரிந்து சென்றுள்ளனர் (கிறிஸ்தவ ஒன்றிப்பு, எண் 6).

எனவே தான், இவ்வொன்றிப்பிற்கு உதவும் வகையில், திருச்சபை ஒளியுள்ளதும், மாசற்றதுமான சபையாகத் துலங்கப்பண்ணவும் (எபே. 5 : 27) 2-ம் வத்திக்கான் பொதுச் சங்கம் மறுமலர்ச்சிப் பணியை மேற்கொண்டது.

இதய மாற்றமின்றி உண்மையான ஒன்றிப்பு இருக்க முடியாது. ஏனெனில் உள்ளங்களைப் புதுப்பித்தலாலும், தன்னையே ஒறுத்தலாலும், அன்பை மிகுதியாகப் பொழிவதாலும் ஒற்றுமைக்கான விழைவுகள் தோன்றி வளர்ச்சியடைகின்றன (கிறிஸ்தவ ஒன்றிப்பு எண் 7). சமாதானத்திற்கும், மன ஒற்றுமைக்கும் அடிப்படையாக நம்மிடம்விளங்க வேண்டியவை, ''தாழ்ச்சியும், சாந்தமும் பொறுமையும்'' (எபே 4 : 1–3). இன்று பிரிந்த சபைகளில் உறுப்பினர்களாயிருப்பவர்கள் பிரிவினைக்கு எவ்விதத்திலும் காரணமல்ல ; மாறாக அவர்களிடத்தில் பாராட்ட வேண்டிய அம்சங்கள் பல உள்ளன. சிறப்பாக, வேதாகமத்தின் மட்டிலுள்ள பற்றுதல், வழிபாட்டில் பங்கெடுக்கும் ஆர்வம், இல்லறக் கிறிஸ்தவர்கள் சபையின் நடைமுறை வாழ்வில் எடுக்கும் பங்கு, காட்டும் ஆர்வம், உள்ளத்திலிருந்து அவர்கள் செபிக்கும் முறை போன்று நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் பல உண்டு.

நாம் ஒன்றிக்க வேண்டுமானால் ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும்– இதற்கு ஒருவரை ஒருவர் அறிய வேண்டும். ''இதற்காக உண்மைக்கு மதிப்பளித்து நன்மனத்தோடு அவர்களைப்பற்றி நாம் படிக்க வேண்டும். தகுந்த விதத்தில் தயாரிக்கப்பட்ட கத்தோலிக்கர்கள் பிரிந்த நம் சகோதரருக்கே உரிய கோட்பாடுகள், அவர்களது வரலாறு, ஞான, இறைபணி வாழ்வு, மறை உளவியல், பண்பாடு என்பவற்றைப்பற்றிச் சிறந்த அறிவைப் பெறவேண்டும். முக்கியமாக, இறையியல் பிரச்சினைகளைப் பற்றிப் படிப்பதற்காக இருதிறத்தாரும் கூடுவது இவ்வறிவைப் பெற பெரிதும் உதவும்'' (கிறிஸ்தவ ஒன்றிப்பு, எண் 9).

எல்லாவற்றிற்கும் மேலாக, ஒன்றிப்பிற்காக செபிப்பது அவசியம். கடவுள் ஒருவரால் மட்டுமே இவ்வொன்றிப்பை நிறைவேற்ற முடியும். நம் மீட்பரே, தன்னைப் பின் செல்லுபவர்கள் அனைவரும் ''ஒன்ருயிருக்க வேண்டும்''— (அரு. 17 : 21) என்று கடைசி இராவுணவின் போது செபித்தார். நாம் தனித்தனியாகச் செபிப்பதைவிட, ஒன்றிப்பு வாரத்தில் பிரிந்த சபைகளின் சகோதரர்களோடு சேர்ந்து ஒற்றுமைக்காகக் கூட்டங்கள் கூடி பல்வேறு காரணங்களால் பிரிந்து நிற்கும் மக்கள் மீண்டும் ஒன்றிப்பதற்கு, நம் எல்லோருக்கும் பொதுவான பரலோகத் தந்தையிடம் கிறிஸ்துவின் வழியாக எல்லோரும் சேர்ந்து செபிப்பதிலும் சிறந்தவழி வேறில்லை.

(ஞான தூதன்)

---

அன்பு, நட்பு புண்ணியமாகப்பொங்கி, காரியங்களை வெற்றிமயமாக்கும் பக்தியின் வீரியத்தை எனக்குக்கொடு

— ரவீந்திரநாத் தாகூர்.

---

அகஸ்ரீன் கிறிஸ்ரோப்பர்

அவர்களின்

## முதல் வருட மரண நினைவு

பிறப்பு : 17-4-1903 இறப்பு : 28-2-1967

எனது நேசப்பத்தாவும், எங்கள் அருமைத் தந்தையுமாகிய அகஸ்ரீன் கிறிஸ்ரோப்பர் அவர்கள் மரணமான முதலாவதுஆண்டு இம்மாதம் 28-ந்தேதி புதன் கிழமை (விபூதித்திருநாள் அன்று) பூர்த்தியாவதால் மறுநாள் 29-ம்தேதி வியாழக்கிழமை அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக யாழ்ப்பாணம், ஆசனக்கோவிலில் ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக்கண்ணுறும் அனைவரும் இவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்ருடும்படி தாழ்மையுடன் கேட்டு நிற்கிறேம்.

துயருறும் மனைவி :
எலிசபெத் பூரணம் கிறிஸ்ரோப்பரும்,
மக்களும்.

26-68

---

திருமதி அன்னம்மா வெலிச்சோர்

அவர்களின்

## 1-ம் வருட மரண ஞாபகம்

மறைவு : 25-2-67

''சீவியத்தில் இவரை நேசித்தவர்களே,
மரணத்திலும் மறவாதீர்கள்.''

இதைக் கண்ணுறும் சகலரும் இவவின் ஆன்மசாந்திக்காக வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகின்ருேம்.

இவவின் பிரிவால் துயருறும் :
கணவன், பிள்ளைகள், சகோதரர், மருமக்கள், பேரப்பிள்ளைகள், இனசனர்.

தாளையடி 28-68

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

தேவனின் திருஇரக்கத்தாலும், அர்ச். யூதாததேயுவின் உதவியாலும் பல வருடங்களாக அனுபவித்துவந்த நோயிலிருந்து பூரணசுகம் பெற்றேன். நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

யோ. யோகத்தம்மா

மாதகல்

18-68

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திரு இருதய இரக்கத்தாலும், பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார் அர்ச். செபஸ்தியார், அர்ச். யூதாததேயு அர்ச். இன்னாசியார், இவர்களது இரக்கத்தாலும் எனது தாய்க்கு வந்த வருத்தம் குணமாகியது. இவர்களின் நாமம் புகழப்படுவதாக.

ஓர் அடியாள்,
சாம்பல்தீவு. 24|68

---

### நன்றியறிந்த தோத்திரங்கள்

அர்ச். அந்தோனியாரிடம் இரக்கமாய் வேண்டிக்கொண்டதினால் எனக்கு ஏற்பட்ட நோயிலிருந்து பூரணசுகம் பெற்றேன்.

ஓர் அடியாள்

அல்லைப்பிட்டி

27-68

* * *

பிறேக்நகர குழந்தையேசுவிடம் இரக்கமாக மன்ருடியதன் பலனால் அதிசயமான சுகம் கிடைக்கப்பெற்றேன்.

ஓர் அடியான்

27-68

* * *

மரியாயின் மாசில்லாத அர்புத வரவணிக்கத்தை அணிந்ததிம் பலகாலம் என்னைத் துன்புறுத்தி, பலராலும் கைவிடப்பட்ட வருத்தம் பூரணசுகமாகியது.

ஓர் பக்தன்

27-68

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## ஆஸ்பத்திரி இரத்தவங்கி

கொழும்பு அரசினர் பெரியஆஸ்பத்திரி இரத்தவங்கி நாளொன்றுக்கு 60முதல்70பைந்து இரத்தமே சேகரிக்கின்றது. ஆனல், 90முதல் 100பைந்து இரத்தம் அங்கு தேவைப்படுகின்றது. சேகரிக்கப்படும்இரத்தம் சிவஅபாயத்திலுள்ள நோயாளருக்கும், அத்தியாவசியம் தேவைப்படும் நோயாளருக்குமே செலுத்தப்படுகிறது. ஆங்காங்கு மலேரியா தலைகாட்டியிருப்பதால இரத்தவங்கிவான்கள் வெளியிடங்களுக்குச்சென்று இரத்தம்சேகரிப்பது கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது. நோயாளிகளின் இனசனரிடம் இரத்தம்உதவக்கேட்கும்போது அவர்களும் பின்னடிக்கிறார்களாம். ஆனல்,பிறநாடுகளில் இப்படியில்லையாம்.

## பருப்புகளின்விலை

சில பருப்புவகைகளுக்கு உணவுப்பகுதி கட்டுப்பாட்டுவிலையைக் கூட்டி விதித்திருக்கிறது. பிறநாடுகளிலே அவற்றின்விலை அதிகரித்திருப்பதே இதற்குக் காரணமாகும். பாசிப்பயறு ருத்தல்48சதத்திலிருந்து 58சதமாகவும், சிந்தாமணிக்கடலை 46சதத்திலிருந்து 54சதமாகவும், துவரம்பருப்பு 45சதத்திலிருந்து 52சதமாகவும், கடலைப்பருப்பு 54சதத்திலிருந்து 60 சதமாகவும் விலைகூட்டப் பட்டிருக்கிறது.

## கட்டிப்பால் விற்பனை

பொலனறுவையிலே அமைக்கப்பட்டுள்ள கட்டிப்பால் தொழிற்சாலை வருகிறபங்குனிமாதம் 14ஆம்திகதி முதல் பெருமளவிலே கட்டிப்பால் தயாரிக்கத் தொடங்கும். "கவ் அன் கேற்," "பொகும்"எனும் பெயர்களைக் கொண்ட இருவகை ரின்பால்வகைகள் அதில் தயாரிக்கப்படும். இந்தத் தொழிற்சாலையைப் பிரதமர் சித்திரைமாதம் 5ஆம்திகதி திறந்துவைப்பார். அன்றுமுதல் இந்தச்சுதேச ரின்பால்கள்இரண்டும் பொதுமக்களின் பாவனைக்கு விற்பனைசெய்யப்படும். அதில் மாதம்ஒன்றுக்கு 2லட்சத்து 50 ஆயிரம் பால்ரின்கள் தயாரிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

## பெற்ரேல் ஆராய்ச்சி

பிரான்சிய நிபுணர்கள்மூவரும் பெற்ரேல் கூட்டுத்தாபன அதிகாரிகளும்கலந்து நெடுந்தீவிலே இருவாரங்களாக நடத்திய ஆராய்ச்சியின் விளைவாய் அங்கு பெற்ரேல்இருப்பதன் அறிகுறியான சேதனப்பொருட்கள் படைபடையாக மிகஆழத்தில் காணப்படுவதாயும், நெடுந்தீவுக்கு அடுத்தபடியாக அவைகள் மன்னாரிலேயே அதிகம் காணப்படுவதாயும் தெரிவித்திருக்கின்றார்கள்.

## நெல்லும் நிலக்கடலையும்

முல்லைத்தீவுப்பகுதியிலே இம்முறை நிலக்கடலை அதிகமாக விளைந்திருக்கிறது. அதனல் வியாபாரிகள்பலரும் அங்கு போட்டியிலே விலைகொடுத்து அதனை வாங்குகின்றனர். ஒருஅந்தர் நிலக்கடலை இப்போது 65 ரூபாவாக விலைப்படுகின்றது. அவ்வாறே நெல் வியாபாரிகளும் சென்று புசல்ஒன்று 16ரூபாவீதமவாங்கி யாழ்ப்பாணம் கொண்டுவருகின்றார்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றிற்குக் கொடுக்கும் உத்தரவாதவிலை குறைவாயிருப்பதால் விவசாயிகள் தனிப்பட்ட வியாபாரிகளுக்கே அவைகளை விற்பனைசெய்கின்றார்கள்.

## மிளகாயும் மல்லியும்

யாழ்ப்பாணத்திலுள்ள கடைகளில் மல்லியும், மிளகாயும் போதியமட்டும் இருப்பதாகத் தெரியவருகிறது. மிளகாய், மல்லி பெர்மிற்றுக்குப் போதியளவு வாங்கலாம்; இவற்றிற்குத் தட்டுப்பாடு ஏற்படவில்லையென்று பிரபலவர்த்தகர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார். ஆனல் இவைகளை வாங்குவதற்குக் காரியாதிகாரியிடம் பெர்மிற் பெறுவதுதான் கஷ்டமாயிருக்கின்றது.

## ஒருருத்தல் செத்தல்மிளகாய்

யாழ்ப்பாணத்திலே அரசாங்க விற்பனைப்பகுதி சென்றவெள்ளிக்கிழமை முதல்ஆளுக்கு 1ருத்தல்மிளகாய்3ரூபா 25சதவீதம் விற்பனைசெய்து வருகிறது. இந்தமிளகாயை மக்கள்நெடுநேரம் நீண்டகியூவில் நின்றுதான் வாங்குகிறார்கள்.

## அணைக்கட்டுவேலை

அராலியிலே கடல்நீர் ஊர்மனைக்குள்சென்று பெருந்தேசப்பரப்பை உவர்நிலம் ஆக்குவதால் புன்னாலைச் சந்தியிலிருந்து கடற்கரைநீளம் வழுக்கையாறுவரை உயர்ந்த அணைக்கட்டு ஒன்று கட்டப்படுகின்றது. கமத்தொழில்பகுதி கொண்டுநடத்தும் இதவேலைக்கு அரசாங்கத்தால் 14,000ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

## பனங்கட்டி, பனைவெல்லம்

பனங்கட்டி, பனைவெல்லம் போன்றவைகளைச் செய்வதற்குத் தேவைப்படும் பதநீரைப் பெறுவதற்காகத் தென்னை, பனை மரங்களிலிருந்து பாணியெடுப்பதற்கான அனுமதிப்பத்திரங்களைத் தேவைப்படும் சங்கங்களுக்கு உடனடியாக வழங்குமாறு மாவட்ட அதிபருக்குஉள்நாட்டுமந்திரி உத்தரவு பிறப்பித்திருக்கின்றார். இதனல் நாட்டிலே பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்குமென்றும், வெள்ளைச்சீனியால் ஏற்படும் வீண்செலவையும், நீரிழிவுபோன்ற வியாதிகளையும் அவை தடுக்குமென்றும் அவர்கூறுகின்றார்.

## 4மாதம்—31பஸ்விபத்து

யாழ்ப்பாணப்பகுதியிலே சென்ற நான்குமாதங்களில்மட்டும் போக்குவரத்துச்சபை பஸ்களால் 31வீதிவிபத்துகள் நிகழ்ந்திருக்கின்றன. இவற்றிலே நான்குவிபத்துகளில் ஆறுபேர் உயிரிழந்தனர். இவ்வாறு வடபகுதிப் பொலிஸ்தலைமைக் காரியாலயம் தெரிவித்துள்ளது. இந்தவிபத்துகளுக்கு முக்கியகாரணம், பஸ்சாரதிகள் மதுபோதையில் இருந்தமையேயாம். வல்லைச்சந்தி விபத்தில் 4பேரும், முறிகண்டி, முல்லைத்தீவு, யாழ்ப்பாண பஸ் நிலையங்களில் 3பேருமாக ஆறுபேரும் உயிரிழந்தார்கள்.

## ஆசிரியருக்கு வேண்டுகோள்

ஆடம்பரமுறையிலே ஆடைகளை அணியவேண்டாமென்று கேட்டுக் கல்வித்தலைவர் ஆசிரியர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். இந்தவேண்டுகோளை விடுக்கும் சுற்றுநிருபம்ஒன்று சகலபாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

## மகாநாயக்கா தேரோ குணமடைந்தார்

கடினநோய்கண்டு சிலகாலமாகக் கொழும்பிலுள்ள அரசினர் பெரியஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவந்த மல்வத்தை மகாநாயக்க தேரோ கனம். இராஜகுரு அமுனுகம்விபாஸி அவர்கள் நல்லசுகமடைந்து கண்டி மல்வத்தை விகாரைக்குச் சென்ற17ஆம் திகதியன்று திரும்பியிருக்கின்றார்.

## கப்பல் தாமத கட்டணம்

கொழும்புத்துறைமுகத்திலே தங்கள் கப்பல்களுக்கு ஏற்பட்ட தாமதம்காரணமாகப் பிறநாடுகளைச்சேர்ந்த கப்பல்களின் சொந்தக்காரருக்குத் தாமத கட்டணமாக அரசாங்கம் பிறநாட்டுச் செலாவணியாக 30லட்சம்ரூபா இறுத்திருக்கிறது. உணவுப்பொருள்கள், உரங்கள், நிலக்கரி, பஸ்கள், மற்றும் சரக்குகளை அரசாங்கத்துக்கு ஏற்றிக் கொண்டுவந்த இந்தக்கப்பல்கள் துறைமுகத்தில் நீண்டகாலம் தாமதித்து நின்றமைக்காக இந்த30லட்சம்ரூபாவும் பவுணாகவும், டொலராகவும் இறுக்கப்பட்டது.

## பஸ்களின் பரிசோதனை

யாழ்ப்பாணப் பொலிஸ்சுப்பிறின்ரன் தலைமையில்நடைபெற்ற மகாநாடு ஒன்றில், போக்குவரத்துச்சபைப் பஸ்களை ஆங்காங்கு வீதிகளில்நிறுத்தி மதுபோதையிலுள்ள சாரதிகளைக் கைதுசெய்வதற்கான பூரணஅதிகாரம் பொலிஸ்இன்ஸ்பெக்றர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. கவலையீனமாகப் பஸ்களை ஓட்டுதல், வேகமாக அவைகளை ஓட்டுதல், மிதிபலகையில்நின்று பிரயாணஞ்செய்தல், கூடுதலான பிரயாணிகளைப் பஸ்களில் அனுமதித்தல் ஆகியவற்றிலும் பொலிசார் இனிமேல் கண்காணித்துச் சட்டநடவடிக்கை எடுப்பார்கள். மேலும் மாநகரசபை, நகரசபை, பட்டினசபை, எல்லைக்குள் 20 மைலுக்குக் குறைந்தவேகத்திலும், ஏனையபகுதிகளில் 25மைலுக்குக் குறைந்தவேகத்திலும் பஸ்கள் செலுத்தப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது

## கல்லூரிவசதிக் கட்டணம்

கல்லூரி மாணவர்களிடமிருந்து பலவந்தமாக வசதிக்கட்டணம் அறவிடக் கூடாதென்றும், அறவிடப்படும் கட்டணத்தையும் வீணாகச் செலவிடப் படாதென்றும் அரசாங்க கல்லூரிகளின் அதிபர்கள்சகலருக்கும் கல்வி மந்திரி காரியாலயம் ஒருசுற்றுநிருப மூலம் தெரிவித்திருக்கிறது.

## புடவை இறக்குமதி

பிறநாடுகளிலிருந்து இலங்கையில் புடவைகளை இறக்குமதிசெய்து வழங்குவதற்கான ஏகபோக உரிமையைக் கொண்டுள்ள லங்கா சதுசல புடவை இறக்குமதிஸ்தாபனம் தமிழ், சிங்களப் புதுவருடப்பிறப்பைமுன்னிட்டுக் கிழக்குஐரோப்பிய நாடுகளிலிருந்து பெருந்தொகையான புடவைகளை இறக்குமதிசெய்ய விருக்கின்றது. இறக்குமதி செய்யும்பொழுது இலங்கைப்பொருள்களை வாங்கும் நாடுகளிடமிருந்தே அவைகள் வாங்கப்படும்.

## சீமெந்து விற்பனை

உண்மையிலே தேவைப்படுவாருக்கு நிச்சயமாகக் கிடைக்கத்தக்கதாகக் காங்கேசன் சீமெந்து இனிமேல யாழ்ப்பாண மாவட்டத்திலே கூட்டுறவுப் பண்டகசாலைகள்மூலம் வழங்கப்பட வேண்டுமென்று யாழ்ப்பாணக் கச்சேரியிலே அரசாங்கஅதிபர் தலைமைவகித்த ஒருமகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. புதிய திட்டப்படி சீமெந்துகேட்டுச் செய்யப்படும் விண்ணப்பங்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அல்லது கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு அனுப்பப்படவேண்டும். அவைகள் இந்தவிண்ணப்பங்களைப் பரிசோதனை செய்து உண்மையில் சீமெந்து தேவைப்படும் விண்ணப்பகாரருக்கே அது வழங்கப்படும்.

## 62-வது விபத்து மரணம்

தங்காலையிலே சென்ற14ஆம்திகதியன்று போக்குவரத்துச்சபை பஸ் ஒன்றால் பாதசாரிஒருவர் மோதுண்டு மரணமடைந்தார். இந்தவருடத்திலே இதுவரை போக்குவரத்துச்சபைப் பஸ்கள்பலியெடுத்த 62-வதுஆள் இவராகும். இந்தமனிதர் பெருந்தெருவால் கடைக்கு நடந்துசெல்லும்போது பஸ்ஸால்மோதுண்டு உயிரிழந்தார்.

## இலவச மதியப்போசனம்

பாடசாலைகளில் ஏழாம்வகுப்புக்கு மேற்பட்டமாணவர்களுக்கு இலவச மத்தியானப்போசனம் வழங்குவதில்லையென்று கல்விமந்திரி காரியாலயம் தீர்மானித்திருக்கின்றது. இதற்குக் காரணம், ஏழாம்வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்கள் மதியப்போசனம் சாப்பிடுவதில்லையெனக் கூறப்படுவதேயாகும்.

## சாட்சிக்கூண்டில் ஆசனம்

நாட்டிலே இருந்துவருகின்ற நீதிஸ்தலங்கள் ஒவ்வொன்றிலுமுள்ள ஒவ்வொருசாட்சிக் கூண்டிலும் ஒருகதிரை வைக்கப்பட வேண்டுமென்று கேட்டு நீதிமந்திரி காரியாலயம் ஒருசுற்றறிக்கை விடுத்திருக்கின்றது. சாட்சிகள் சாட்சியம் அளிக்கும்போது மணித்தியாலக்கணக்கில் நின்றுகொண்டிராது உட்கார்ந்துகொண்டிருக்க வசதிபண்ணுமுகமாகவே இந்தஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. தங்களால நிற்கமுடியாதென்றுசொல்லி ஆசனம் கேட்கும சாட்சிகளுக்கே இப்போது ஆசனம்வழங்கப்படுகிறது.

## குழாய்நீரும் மின்சாரமும்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு மேலதிகமாக 80,000கலன்தண்ணீர் குழாய்மூலம் வழங்கப்பட விருக்கிறது. இந்தத் தண்ணீர் திருநெல்வேலி, கோண்டாவிலாகிய இடங்களிலிருந்து குழாய் மூலம் கொண்டுவரப்படும். அப்போது மேலதிகமாக 200 தண்ணீர்க்குழாய்கள் அமைக்கப்பட வேண்டிவரும். வீதிகளில் அமைக்கப்படும் குழாய்களுக்குமட்டும் 40,000கலன் ஒதுக்கப்படுமெனத் தெரியவருகிறது. மேலும் மாநகரசபை எல்லைக்குள்ளே மின்சாரமில்லாத பகுதிகளுக்கு 78,000ரூபா செலவில் மின்சாரமும விரைவிலே வழங்கப்படவிருக்கிறது.

## யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் ஆண்டின் முதலாவது பருவகாலச் சுப்பிறீங்கோடு சென்ற21ஆம்திகதி காலை 11மணிக்கு ஆரம்பமானது. நீதியரசர் டக்றர் எச். டபிள்யு. தம்பையா, கியூ. சி. அவர்கள் விசாரணையை ஆரம்பித்துநடத்துகின்றார். இம்முறை 13கொலைவழக்குகளும், 6கொலைஎத்தன வழக்குகளும், 1சுறிகுண்டுவீச்சு வழக்குமாக 20வழக்குகள் விசாரணைக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

## புதிய தொழில்நுட்பக் கல்லூரி

சஞ்சூசையப்பர்சபைச் சந்நியாசர்கள் மட்டக்களப்பிலே தொழில்நுட்பக் கல்லூரிஒன்றைத் திறக்கவிருப்பதாகத் தெரியவருகிறது. இதற்கானவேலைகள் முற்றுப்பெற்றுள்ளனவென்றும், இந்தியாவில் பயிற்சிபெறும் சங். டோமினிக்பிறதரும், பிலிப்பைன்ஸில் பயிற்சிபெறச்சென்றுள்ள சங். லீனஸ், சங். பயஸ்பிறதர்மாரும் அண்மையிலே திரும்பிவந்ததும கல்லூரி ஆரம்பமாகுமென்றும் அறியக்கிடக்கிறது. முக்கியமாக வறியமாணவர்களுக்கு அதிலே இலவசபயிற்சி அளிக்கப்படுமெனச் சொல்லப்படுகிறது.

## மாநகர நவீனசந்தை

யாழ்ப்பாண மாநகரசபையின் நவீன மத்தியசந்தைக்கான முதல்கட்டட வேலைஒப்பந்தம் சாமுவேல் ஸ்தாபனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. 10லட்சத்து 50ஆயிரம்ரூபாவுக்கு இது வழங்கப்பட்டிருக்கிறது. கட்டடவேலைகள் இம்மாதஇறுதியில் ஆரம்பமாகும் போல் இருக்கிறது.

## அமெரிக்க கோதுமைமா

அமைதிப்பணிக்கான உணவுஉதவித் திட்டத்தின்கீழ் அமெரிக்காவிலிருந்து ஒருகப்பலில் 11,000தொன் கோதுமைமா சென்றவியாழக்கிழமை கொழும்புத்துறைமுகம வந்துசேர்ந்துள்ளது. முன்சொன்ன உணவுஉதவித் திட்டத்தின்கீழ் கொழும்பிலே சென்றஐப்பசிமாதம் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின்படி அமெரிக்காவிலிருந்து இலங்கைக்குக் கப்பலில் ஏற்றி அனுப்பப்படவேண்டிய 83,000 தொன் கோதுமைமாவிலும், 6,000 தொன் தானியத்திலும் இது ஒருபகுதியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லற கத்தோலிக்கர்கள் போதிக்கிறார்களா?

## தினசரி பூசை வழிகாட்டி

### மாசி மாதம் — 1968

| | | | |
|---|---|---|---|
| 25 | ஞா. | மூன் தவக்கால 3-ம் ஞா. | [ஊ] |
| 19 | தி. | கிழமைப்பூசை | [ஊ] |
| 20 | செ. | கிழமைப்பூசை | [ஊ] |
| 28 | பு. | விபூதிப்புதன் | [ஊ] |
| 29 | வி. | கிழமைப்பூசை | [ஊ] |

### பங்குனி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 1 | வெ. | கிழமைப்பூசை | [ஊ] |
| 2 | ச. | கிழமைப்பூசை | [ஊ] |

சத்தியவேத
பாதுகாவலன்
1968-ம்ஞூ மீ மாசி 24-ங்உ

## ஒரு படிப்பினை

சமீபத்தில் இ. போ. ச. பஸ் ஒன்றுக்கு நேர்ந்த அதிபயங்கர விபத்து கண்டோர் கேட்டோர் மனதைத் திடுக்கிட வைத்துள்ளது. இருபத்துமூன்று உயிர்களைக் குடித்த இந்நிகழ்ச்சிக்குப் பொறுப்பாளி யார்? அதைஓட்டிச் சென்ற சாரதியானுல் அவன் அதற்குத் தக்க தண்டனை அடைந்துவிட்டான்என்று சொல்லலாம். ஆனுல், இந் நிகழ்ச்சி ஒரு தனித்த சம்பவம் அல்ல. இவ்வள்வு பயங்கரமானதாக இல்லாவிடினும் பற்பல விபத்துக்கள் தீவின் பல்வேறு பாகங்களில் நடந்துள்ளன. விபத்துக்கள் நேராதபோதும் பஸ்போக்குவரத்தைப்பற்றிப் பொதுமக்களிடையில் அதிருப்தி இருந்து வந்திருக்கிறது. ஒரு பெரும் விபத்துநேரும்போதுதான் பல நாட்களாக மறைக்கப்பட்டிருந்த குறைபாடுகள்,ஊழல்கள் வெட்ட வெளிச்சமாகின்றன. இன்றைய நிலைமைக்குப் பஸ் சாரதிகளும், இ. போ. சபையினரும் ஒருவரை ஒருவர் குற்றஞ் சாட்டுகின்றனர். இருதரப்பிலும் ஓரளவு நியாயம் இருக்கலாம். ஆனுல், நியாயம் காட்டி வாதாடுவதால் இழந்த உயிர்களை மீட்டுவிட முடியாது. இனிமேலும் இவ்விதம் நேராமலிருக்கத்தக்க பரிகாரம் தேட வேண்டும். நித்திரையிலாழ்ந்திருப்பவன் பயங்கரக் கனவு கண்டு விழித்துச் சில நிமிடங்களின்பின் திரும்பவும் தூங்கத் தொடங்குவதுபோல் ஒருபெரும் விபத்தின் விளைவுகளால் உலுக்கப்பட்டுச் சிலநாட்கள் விழிப்பாய் இருந்தபின் திரும்பவும் பழைய குட்டையில் விழுந்துவிடுவது நாம் பலமுறை கண்கூடாகக் கண்டதொன்று. இந்த விபத்து அங்ஙனமில்லாமல் நிரந்தரமான பரிகாரத்தை ஏற்படுத்துமென நம்புவோம்.

எந்த வாகனத்தைச் செலுத்துபவனுக்கும் ஒரு மனப்பக்குவம் அவசியம். தனதுவாகனத்திற்பிரயாணம்செய்வோர், வழியிற்செல்வோர் ஆகியவர்களுக்கு எவ்வித ஊறும் நேரிடாதவாறு கவனிப்பது தனது கடமை என்பதை அவன் தன் மனதிற்கொள்ளவேண்டும். மக்கள் போக்கு வரத்துக்காக ஆக்கப்பட்ட ஒரு கருவியை, ஒரு பயங்கர ஆயுதமாக மாற்றிவிடக் கூடாது. பொதுப் பாதைகளில் எண்ணற்ற விபத்துக்கள் ஏற்படுகின்றன என்றுல் அவற்றுட் பெரும்பாலானவை தவிர்க்கக் கூடியவையே. அலட்சியமாக, கண்மூடித்தனமான வேகத்தில் ஓட்டுவதும், குடிவெறியில் அல்லது தூக்கமயக்கத்தில் வாகனங்களைச் செலுத்துவதும் சாரதிக்கும் வண்டியிலுள்ளோருக்கும் மட்டுமல்ல, தெருவில் நடமாடும் ஏனைய மக்களுக்கும் ஆபத்து விளைவிக்கும் செயலாகும். தனது அலட்சியத்திஞல் பிற உயிர்களுக்கு ஊறு விளைவிப்பவன் ஐந்தாம் கற்பனையை மீறுகிறுன் என்று திருச்சபை கூறுகின்றது. ஆகவே, ஒரு கத்தோலிக்கன் இவ் விஷயத்தில் எத்தகைய மனப்பான்மை உடையவனுய் இருக்க வேண்டும் என்பது தெளிவாக விளங்குகின்றது.

ஒரு விடுதிச்சாலையின் ஒரே அறையில் இருவர் தங்கிவந்தனர். ஒருவர் ஒரு கத்தோலிக்கர், மற்றவர் எம்மதத்தைச்சேர்ந்தவருமல்லர். படுக்கப் போகுமுன் அக் கத்தோலிக்கன் இராச் செபத்தைச் சொல்லுவார். அவர் இதைப்பற்றி ஒன்றும் நினைக்கவில்லை. ஆனுல் சொற்ப வருடங்கட்குப் பின் ஒரு கத்தோலிக்க கோயிலிலிருந்து ஒரு ஞாயிறுதினம் பூசைக்குப்பின் மற்றையவர் வெளியே வருவதைக் கண்டார்.

"நீர் ஒரு கத்தோலிக்கன் என்று எனக்குத் தெரியாது" என்று இவர் அவரைப் பார்த்துச் சொன்னுர்.

"அது மெய்தான்; ஆனுல் நீர் ஒவ்வோர் இரவும் செபஞ் சொல்லுவதைக் கண்டதும், என்னிடம் இல்லாத ஒன்று உம்மிடம் இருப்பதாக நினைத்தேன். அதன்பின் கத்தோலிக்க சமயத்தைப்பற்றி விசாரணைகள் செய்து கத்தோலிக்கனுனேன்" என்று மறுமொழி கூறினுன்.

இதுவே கத்தோலிக்க வாழ்க்கையின் (செயலின்) மவுனமான போதனை. எந்த இல்லற கத்தோலிக்கனும் (ஆணுயிருந்தாலென்ன, பெண்ணுயிருந்தாலென்ன) இதைச் செய்ய முடியும், நாங்கள் விரும்பிஞலென்ன, விரும்பாவிடிலென்ன எங்கள் செயல்கள், எங்கள் ஒழுக்கம் ஆகிய யாவும் பிற மக்களைக் கவர்கின்றன. அது நன்மைக்கோ தின்மைக்கோ எதுவாக இருக்கலாம். அது எங்களிலேயே தங்கியிருக்கிறது.

அது முழுவதும் எங்களிலா தங்கியிருக்கிறது? இல்லை; கிறிஸ்தவர்களுக்கு ஞானஸ்நானத்திலும், உறுதிப் பூசுதலிலும் தூய ஆவியானவரின் வரங்கள் கிடைக்கப்பெற்று உலகத்தில் கிறீஸ்துவின் பிரதிநிதிகளாக அவர்கள் இருக்கின்றனர். ஒரு குருவானவருக்கு மூடப்பட்டிருக்கும் உலகத்தை ஓர் இல்லற கத்தோலிக்கன் சென்றடைய முடியும்.

குருக்கள் சென்றடையமுடியாத எத்தனையோ இடங்களுக்கு இல்லற கத்தோலிக்கர் செல்ல முடியும். உதாரணமாக தொழிற்சாலை, தொழில் நிலையம், விற்பனைசாலை, குடும்பத்தின் ஒரு நட்புக்கொண்ட அன்பன்.

ஓர் இல்லற கத்தோலிக்கன் பலரைச் சந்திப்பதுபோல மக்களைச் சந்திக்க ஒரு குருவானவருக்குச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. ஒன்றிலும் விசுவாசமற்றவர்கள், கத்தோலிக்க திருச்சபைக்கு வெளியேயுள்ள கிறிஸ்துவர்கள், அல்லது ஒரு குருவானவரை அஞ்சும் அல்லது வெறுக்கும் கத்தோலிக்கர் அவர்களிற் சிலர் ஒருபோதும் ஒரு குருவானவருடன் நம்பிக்கையுடன் கலந்து பேசமாட்டார்கள்.

இவ்வகைப்பட்ட பலர் (அப்படிப் பலர் இருக்கிறுர்கள்) தங்கள் சமயப் பிரச்சினைகளைப் பிறருடன் நிச்சயமாகவே கலந்தாலோசிக்க விரும்புகின்றனர். இவ்வாறு அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய ஒரு கத்தோலிக்கன் உண்மையாகவே ஒரு தேவனின் தூதுவனுகவே இருக்கிறுன்.

தேவனின் தூதுவனே? ஆம். தேவஞல் உறுதிப் பூசுதல் என்னும் தேவதிரவிய அனுமானம் மூலம் தூய ஆவியானவர் இறங்குவதுபோலவே யூதருக்கு அஞ்சி மேலறை யொன்றில் பதுங்கியிருந்த அப்போஸ்தலர் மேல்தான் முதன் முதல் தூய ஆவியானவர் இறங்கிவந்தார். அவரைப் பெற்றபின் அவர்கள் என்ன செய்தார்கள்? அச்சம் நீங்கியவர்களாய் வெளியேறி எல்லோர்க்கும் எல்லாப் பாஷையிலும் போதிக்கத் துவங்கினுர்கள். அவர்களை வாதித்தவர்களைப் பார்த்து துணிவுடன் "மனிதருக்கு அல்ல தேவனுக்கே நாங்கள் அமையவேண்டும்" என்று கூறினுர்கள். இவர்கள் தான் தூய ஆவியானவர் வருவதற்கு

பி. சவரிமுத்து

முன் பயப் பிராந்திகளாயிருந்தனர். ஆனுல் அவருடைய வருகையின்பின் வேதத்தை மறுதலித்தலிலும்பார்க்க மரணமே சிறந்தது என்ற கொள்கையுடன் தம் உயிரையும் வேதத்துக்காக அர்ப்பணம் செய்தனர்.

பெந்தக்கோஸ்தன்று அப்போஸ்தலர்கள் பெற்ற கொடைகளின் பெரும்பாலானவற்றை இல்லற கத்தோலிக்கனும் உறுதிப்பூசுதல் மூலம் பெறுகிஸ்ருன். ஆனுல் பகிரங்கமான முறையில் அல்ல, தெரு மூலைகளிலிருந்து உறுதிப்பூசுதல் பெற்றவர்கள் போதிப்பதில்லை. ஆனுல் ஞானம், புத்தி, விமரிசை, அஞ்சாமை, அறிவு, தேவபக்தி, தேவபயம் என்ற கொடைகளைப் பெறுகின்றனர். இக் கொடைகள் மூலம் ஒருவர் திருச்சபையில் வளர்ச்சி அடைகிறுர். செயல்கள், சிநேகிதங்கள், சம்பாஷணைகள்மூலம் போதிக்கவும், கிறீஸ்தவ வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்களை மேற்கொள்ளவும் திறமை பெறுகின்றனர். "சாதாரண சம்பாஷணைகள்மூலம் போதித்தல்" என்று கூறும்பொழுது பிறருக்குச் சமயத்தைப்பற்றி எந்நேரமும் கூறி மனக்கசப்பை ஏற்படுத்துவதல்ல. ஆனுல் சமயசம்பந்தமான பிரச்சினைகளை ஆறுதலாக ஆராய்ந்து அவற்றை இன்பகரமான முறையில் எடுத்து பிறருக்கு விளக்குதலே.

இக் கொடைகள் எமக்கு இருக்கின்றன. ஆனுல் அவற்றை நாம் பயன்படுத்துகிறேமா? இக் கொடைகள் எம்மிடம் இல்லையாயின் அவற்றை நாம் அலட்சியஞ் செய்து விட்டோமல்லவா? எங்கள் சம்பாஷணை பெரும்பாலும் அர்த்தமற்றதாக இருக்கிறது' பேச்சுவன்மை நிரம்பியவர்களாகிய எங்களிற் பலர் சமயத்தைப்பற்றி எளிதாகப் பேசமுடியாத நிலையில் இருக்கின்றனர்.

எங்கள் மூதாதையர்களுக்கு இவ்விதகஷ்டம் இருக்கவில்லை. அவர்கள் எந்நேரமும் தேவனைப் பற்றியும் திருமறையைப்பற்றியும் பேசிக்கொண்டே இருந்தனர்.

ஓர் இல்லற கத்தோலிக்கன் போதிக்கிறுஞ? ஆம் என்னத்தைப் போதிக்கிறுன்? தன்னையே தான் என்னவாயிருக்கிறுன். என்ன செய்கிறுன் என்ன பேசுகிறுன். கிறீஸ்துவின் தூதை அவன் போதிக்க முடியுமா? ஆம் ஞானஸ்நானத்திலும் உறுதிப் பூசுதலிலும் அவன் பெற்ற தூய ஆவியானவரிஸ் உதவியைக்கொண்டு நிச்சயமாக அவன் போதிக்க முடியும்.

"ஐறிஸ் ஸ்பொற் லைற்" என்ற பத்திரிகையிலிருந்து மொழிபெயர்க்கம் செய்யப்பட்டது

### தென் வியெற்னமில் மிகப் பாதிக்கப்பட்டவர்கள் சிறுபிள்ளைகளும் வயோதிபரும்

தென்வியற்னமில் சுமார் 20 மாகாண தலைப்பட்டணங்களில் நடைபெற்றுவரும் பயங்கர யுத்தத்தின் விளைவாக, அத்தேச மக்கள் அனுபவிக்கும் உபத்திரவங்களோ பல. வியற்கோம், வடவியற்னும் படைகளின் திடீர் தாக்குதலின் பயனுகக் கோடிக் கணக்கான அகதிகள், தங்க வீடின்றி அலைந்து திரிகின்றனர். அல்லற்படும் பெரும்பகுதியினர் வயோதிபரும்,சிறுபிள்ளைகளுமே. உலக தர்ம ஸ்தாபனங்கள் பல இவர்களுக்குத் தம்மாலான உதவி செய்ய முன் வந்திருக்கின்றன. ஆனுல், அவர்களால் அளிக்கப்படும் உதவி அல்லற்படுவோரைச் சென்று அடைவதுஅரிதாகஇருக்கின்றது. இங்கிலாந்தில் சில விசாரணைப் பங்குகளில் வெள்ளிக்கிழமைகளில் விரதமிருந்து அதனுல் மிச்சம்பிடிக்கும் பணத்தைத் திரட்டித் தென்வியற்னும் மேற்றிராணிமார் சங்கத்துக்கு அனுப்பி வைக்கின்றனர்.

## பெயிறூற் நகரில் கிறிஸ்தவ சபையினரின் விசேஷ மகாநாடு

சர்வதேச நீதி—சமாதானம் ஆகியவற்றுக்காக எவ்வாறு தொண்டு புரியலாம் என வத்திக்கானும் உலக கிறிஸ்தவசபை ஸ்தாபனத்தாரும் ஒன்றுகூடி ஆலோசிக்க முடிவுசெய்ததன் விளைவாக லெபனன் தேசத்தில் பெயிறூற்நகரில் இவ்வருடம் சித்திரைமாதம் 21-ம் திகதி தொடக்கம் 27-ம் திகதிவரையும் இதற்கென விசேஷ மகாநாடு நடத்த இருக்கின்றனர். ஒற்றுமை இயக்கத்திஞல் நாம் பயனடைவதற்கு இத்துறைகளில் சகல கிறிஸ்தவ சபைகளும் ஒருமித்து இயங்கவேண்டுவது அவசியமாகின்றது. போதனையளவில் இதுவரை நின்ற ஒற்றுமை இயக்கம் செய்கையளவில் இறங்கி இருப்பது மகிழ்ச்சிக்குரியதே.

## இந்திய அரசாங்கத்துக்கு ஒரு மனு

ஒறிசா பிரிவில் சமயசுதந்திரத்துக்கு எதிராக அரசாங்கத்தால் அப்பகுதிப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட இருக்கும் மசோதாவை எதிர்த்து இந்திய கத்தோலிக்கர் பிரதமமந்திரி இந்திரா காந்திக்கு மனுச்செய்திருக்கின்றனர். இம் மசோதா நிறைவேறுமாஞல் அரசியல் அடிப்படைத் திட்டத்தில் மாற்றங்களைப் புகுத்துமெனவும், அத்திட்டத்தில் ஒவ்வொரு சமயமும் தத்தம் சமயத்தை அனுசரிக்கவும் பிரசங்கிக்கவும் சுதந்திரம் உடையதாயிருக்குமெனும் வாக்குறுதியை நிர்மூலமாக்குவதாகவும் இருக்கின்றது என அம்மனு சுட்டிக்காட்டுகின்றது.

### கூட்டுத்தாபனமாகும்

புகையிரதப்பகுதியை ஒருகூட்டுத்தாபனமாக மாற்றியமைக்கப் போக்குவரத்துமந்திரி முடிவுசெய்திருக்கின்றுர். இதற்கான நடவடிக்கை விரைவிலே எடுக்கப்படும். புகையிரதப்பகுதி, விமானப்பகுதி, போக்குவரத்துச்சபையாகிய மூன்றுஸ்தாபனங்களுக்கும் பொதுவாக ஒருபுதியநிறுவனமும் அமைக்கப்படவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பரசரின் — திருப்பாலத்துவ சபை



பாப்பரசரின் திருப்பாலத்துவ சபையானது ஒரு வேத போதக சபையாகும். கத்தோலிக்க சிறுவர்களின் மனதில் வேதபோதக மனப்பான்மையை உருவாக்கி, அவர்களது செபதபங்கள் காணிக்கைகள்மூலம் வேதபோதக நாடுகளிலுள்ள சிறுவர்களுக்கு உதவியையும், கிறிஸ்தவ கல்வியையும் பெற்றுக் கொடுப்பதே இச்சபையின் நோக்கமாகும்.

இச்சபை விசுவாசப்பரப்புதல் சபையின் ஒரு கிளையல்ல. அதற்கு அடுத்தபடியான ஒரு புறம்பான சபையாகும். இச்சபையின் தலைவராகவும் அங்கத்தவர்களுக்கு முன்மாதிரியாகவும் இருப்பது குழந்தை யேசுவாகும். அவரது பாலப்பருவத்தை அங்கத்தவர்கள் கண்டுபாவிக்கும்படி தூண்டப்படுகிறார்கள். சபையின் ஏனைய பாதுகாவலர் பரிசுத்த கன்னிமரியம்மாளும், அர்ச். சூசையப்பரும், குழந்தை யேசுவின் அர்ச். தெரேசம்மாளுமாம் (யேசுவின் சிறிய புஷ்பம்).

## அங்கத்துவம் :

ஞானஸ்நானத் தினத்தன்றே தம்குழந்தைகளை இச்சபையின் அங்கத்தவராகப் பதிவுசெய்யுமாறு பெற்றோர் கேட்கப்பட்டுள்ளனர். இக்குழந்தைகள் தாமாகவே செபங்களைச் சொல்லவும்முடியாது. காணிக்கை கொடுக்க அவர்களிடம் பணமும் இல்லை. எனவே, அவர்களது பெற்றோர் அவர்கள் பெயரால் இவ்விரு காரியங்களையும் அவர்களுக்காகச் செய்துவருகின்றனர்.

ஆனால், இது சற்றுக்காலத்துக்குத்தான்; கூடியசீக்கிரத்தில் இக்கடன்களைத் தாமே செய்யும்படி குழந்தைகளுக்குப் பயிற்சியளிக்கப்படவேண்டும்.

பன்னிரு வயதுக்குட்பட்ட கத்தோலிக்க சிறுவரெல்லோரும் இச்சபையின் அங்கத்தவராக வேண்டுமென்றவிருப்பத்தைப் பரிசுத்ததந்தை அடிக்கடி வெளியிட்டுள்ளனர்.

## அங்கத்தவர்களின் கடமைகள் :

அவர்களது கடமைகளாவன :—

(1) தினந்தோறும் ஒரு பிரியதத்த மந்திரமும், "பரிசுத்த கன்னிகையே! எங்களுக்காகவும், உம்மை அறியாத சிறுவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளும்" என்னும் செபமும் சொல்லி வருதல்.

(2) தமது நற்கிரியைகளையும், தவங்களையும் ஆர்வமிக்க நற்செயல்களையும் யேசுநாதருக்கு ஒப்புக்கொடுப்பது.

(3) கூடுமானல் ஒரு வருடத்துக்கு 50சதம், அல்லது ஒரு சிறு தொகைப் பணம் காணிக்கையாகக் கொடுப்பது.

## நன்மைகள் :

அங்கத்தவர்கள் ஓர் உத்தமமான வேலையைச் செய்கிறபடியால் அதற்கேற்ற பலனை அடைவார்கள். ஆர்வத்திலும் பெருந்தன்மையிலும் நன்கு பயிற்றப்படுகிறார்கள். எண்ணற்ற நற்கிருத்தியங்கள், செபங்கள் பூசைகள் ஆகியவற்றில் அவர்களுக்குப் பங்குண்டு. விசேஷ பலன்களைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

## ஆற்றிய தொண்டுகள் :

அது ஆரம்பித்து 95வருடங்களில், திருப்பாலத்துவசபை 25,000,000 பிள்ளைகளைக் காப்பாற்றி அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க உதவி செய்திருக்கிறது.

இக்குழந்தைகளில் அநேகம் அதிக காலம் உயிர்வாழவில்லை. ஏறக்குறைய 15,000000 பிள்ளைகள் இவ்வுலகிலிருந்து நேரே மோட்சம்சென்றன. எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மற்றக் குழந்தைகள் எண்ணற்ற சிசு நிலையங்களிலும், அநாதை மடங்களிலும், பாடசாலைகளிலும் வளர்க்கப்பட்டனர். தற்போது ஏறக்குறைய 1,000,000 இத்தகைய பிள்ளைகள் இருக்கின்றனர். அவர்களது கல்விக்காகும் செலவில் ஒரு பாகத்தையேனும் இச்சபைகொடுத்துதவி வருகிறது.

பிள்ளைகளே! நீங்கள் ஒவ்வொருவரும் அங்கத்தவராக வேண்டும்.

பெற்றோரே! உமது அருமைச் சிறுர்களை ஞானஸ்நானத் தினத்தன்றே அப்போஸ்தலராக்குங்கள்.

பாடசாலை ஆசிரியர்களே! உங்கள் பொறுப்பிலுள்ள மாணவர்களிடையே செய்யத்தக்க அரும்பணி இது: எல்லாவற்றுக்கும் மேலான இவ்வேலைக்காக செபதபங்களைச் செய்யுமாறு சிறுவர்களைத் தூண்டுங்கள். பரப்புவோராகப் பணிசெய்யுங்கள்.

சங்கைக்குரிய சந்நியாச கன்னியாஸ்திரிகளே! உங்கள் பாடசாலைகளில் இச்சபை செழித்துவளரச் செய்யுங்கள். அது பெரும் ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும்.

யேசுவின் குருமாரே! இச்சபை உங்கள் பாதுகாப்பை வேண்டுகிறது. உங்கள் அன்பை வேண்டுகிறது. அதை கவனித்து வளர்த்து வாருங்கள். உங்கள் சிறுவர்கள் பரிசுத்தப்படுத்தப் படுவார்கள். அவர்களுடைய சிறு இருதயங்கள் அன்பு, பெருந்தன்மை, அனுதாபம் ஆகியவற்றால் நிரப்பப்படும். ஒரு நாள், இதேபிள்ளைகளிற் சிலர் அதி உன்னதமான இப்பணிக்குத் தம்மைப் பூரணமாக அர்ப்பணிக்க முன்வரும்போது அது உங்களுக்குப் பெரும் ஆறுதலைக் கொடுக்கும்.

அன்பர்களே! இச்சபையைப்பற்றிப் பிறருக்கு அறிவித்து அதை ஆதரித்து வருமாறு இச்சபை உங்களை வேண்டுகிறது.

திருப்பாலத்துவ சபையைப் பற்றிய விபரங்களும், தேவையான உதவிகளும் மகிழ்ச்சியோடு அளிக்கப்படும் காணிக்கைகளும், நன்கொடைகளும் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

விபரங்களுக்குப் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

வண. பிதா. அன்ரன் இராசநாயகம்,
மேற்றிராசன இல்லம்,
யாழ்ப்பாணம்.

## இத்தாலிய ஜெனறல் குருவாயினர்

இத்தாலிய பாராளுமன்ற பொலிஸ் பட்டாளத்தில் ஒரு தளபதியான ஜெனறல் மாறியோ பெனடிக்ரி அவர்கள் தமது 68ஆம்வயதில் அங்கு சவொனுநகரிலே சமீபத்தில் ஆசீர்வாதப்பர்சபைக் குருவாக அபிஷேகஞ்செய்யப் பட்டிருக்கின்றார். இப்போது இவர் மார்க்கோ சுவாமியாரென அறியப்பட்டு வருகின்றார். 1899ஆம் ஆண்டு சித்திரை 11ஆம் திகதியன்று இவர் ரோமைநகரில் பிறந்தார். முதலாவது உலகயுத்தத்தில் ஒரு போர்வீரனுகச் சேவைசெய்தவர். எத்தியோப்பிய யுத்தத்தில் இவர் ஒரு கப்ரினுகக் கடமை பார்த்தவர். இரண்டாவது உலகயுத்தத்தில் கிறீஸுடன் நடைபெற்ற போரில் கலந்துகொண்டவர். 1956 ஆம் ஆண்டு பிறிகேடியர் - ஜெனறல் பதவியிலிருந்து இளைப்பாறினர்.

● உற்பத்திச் சாதனைகளிலும், புதியபொருட்களைத் தயாரிப்பதிலும் முதலாளித்துவ நாடுகளைப் பின்பற்றுமாறு சோவியத்தொழில் நிலையங்களுக்கு ருஷியபிரதமர் அலெக்ஸி கொஸிசின் ஒருவேண்டுகோள் விடுத்திருக்கின்றார். பொதுவிலே சோவியத் தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் அமெரிக்கதொழிலாளர்களின் உற்பத்தித்திறமையிலும் எவ்வளவோ குறைவானதென்று அவர்கூறுகின்றார்.

● பிரித்தானிய மகாராணியாரும் அவர்குடும்பத்தினரும் வசித்துவருகின்ற பக்கிங்காம்மாளிகையும், வின்சர் மாளிகையும் அரசாங்கத்துக்குச் சொந்தமானவையாகும். அதனால் அவைகளைப் பராமரிக்கும் செலவுகளை அரசாங்கமே கொடுத்துவருகின்றது. எலிசபேத் மகாராணியார் முன்னுள் அரசர்களைப்போல் தமது அதிகாரபூர்வமான கடமைகளுக்கே பொதுவாக அவைகளைப் பிரயோகித்துவருகின்றார்.

● பால்மோறல் மாளிகையும் சந்திரிங்காம் மாளிகையும் பிரித்தானிய அரசகுடும்பத்தினருக்கே சொந்தமானவை. இவைகள் முறையே விக்ரோறியா மகாராணியாலும், அவர்குமாரண் ஏழாம்எட்வாட் அரசாலும் தேடிக்கொள்ளப்பட்டன. அதனால் எலிசபேத்மகாராணியார் இவைகளை அழகுபடுத்துவதிலும், பாதுகாத்துப்பராமரிப்பதிலும் விசேடகரிசனை எடுத்துவருகின்றார்.

## பாப்பரசரும் பாலிய பெருமகனும்

பாப்பரசரின் பிரத்தியேக தெலிபோன்நம்பரை அறிந்தவர்களாய் ரோமைநகரிலுள்ள ஒருசிலபேர்களில் ஜியோவான்னி லொஜிநொட்ரீ என்னும் பெயருடைய பாடசாலைப் பாலியர்ஒருவரும் இருக்கின்றார். தனக்கு வந்த நோயிலிருந்து சிறிதுசிறிதாகக் குணமடைந்து வந்தகாலத்திலே இப்பாலியர் பாப்பரசருடன் பேசுவதற்கு அவரின் பிரத்தியேக தெலிபோனைப் பாவனைசெய்து வந்தார்.

ஏறக்குறையப் 12வயதுடைய இந்தப்பாலிய ஜியோவான்னி பாப்பரசரது சகோதரரான செனற்றர் லுடோவிக்கோ மொந்தினி அவர்களின் புதல்வர்களில் ஒருவர். தெலிபோனில் இருவரும் என்னபேசிக்கொள்ளுகின்றனர் என்பது அவர்களுக்குத்தான் தெரியும். ஆனல் பாடசாலையில் தான்படித்த சிலபாட்டுகளைப் படித்துக் காட்டுகிறார் என்பது வெளிப்படையாகும்.

மேலும் பாப்பரசரைப்பற்றி இப்பாலியர் யாது கூறுகின்றார்: தங்கள் குடும்பத்தில் பாப்பரசர் ஒருவரைக் கொண்டிருப்பதையிட்டுப் பெருமை பாராட்டிப் பேசப்படாதென்று அவர்என்னைப் பலமுறையும் எச்சரிக்கின்றார். அவருடன் நாம் பந்திபோசனம் செய்யும்போது பண்ணைஒன்றிலே கூடியிருந்து கலந்துகட்டிச் சாப்பிடுகிறவர்போல் அவர் காணப்படுகின்றார். அவர் மரக்கறிச்சூப்பில் அதிகம் விருப்பமுடையவராய், அதனைப் பிஸ்கற்றுகளுடன் அருந்துகின்றார். கொஞ்சம் திராட்சைரசமும் பருகுகின்றார். அதில்கொஞ்சம் என்னையும் உறிஞ்சிக்குடிக்கத் தருவார். அதிகமாக அதனைக்குடிப்பது ஒரு பாலியனுக்கு நன்றல்லவென்று எச்சரித்து விட்டுத்தான் அதைத் தருகின்றார்.

## இலங்கைக்குப் புறப்படவிருக்கும் வைத்தியக்கப்பல் 'ஹோப்'

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவத்துறை பயிற்சியில் நோய்களைக் குணமாக்கும்முறை மட்டுமல்லாமல், பொதுசுகாதாரம், போஷாக்குப்போன்ற சம்பந்தப்பட்ட துறைகளிலும் அறிவுவிருத்திசெய்யும் வாய்ப்புகளும் வழங்கப்படும்.

" இலங்கைமக்கள் வைத்தியத்துறையில் தங்களுக்குள்ள குறைகளை எமது கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும். அப்போதுதான் எங்களால் சிறந்த சேவையினைச் செய்யமுடியும். இலங்கையர் சிலரை உள்ளடக்கிய குழுவுடன் சில அமெரிக்க டாக்டர்களும் தற்பொழுது இலங்கையில் பலஆராய்ச்சிகளைச் செய்துவருகின்றனர். ஹோப் இலங்கைசென்று சேவைசெய்வதற்கு முன்னர் இக்குழுவினர் முன்னோடியாகப் பல புள்ளிவிபரங்களைச் சேகரித்துவருவார்கள்.

ஹோப் வைத்தியக்கப்பல் 10மாதங்கள்வரை கொழும்புத் துறைமுகத்தில் நிற்கும். இதற்குமேலும் ஹோப் திட்டத்தின்உதவி இலங்கைக்குத் தேவைப்படுமானல், கப்பல் போய்விட்டாலும் மேலும் மூன்றுவருட காலங்களுக்கு இத்திட்டத்தின் அடிப்படையில் உதவிகள் கிடைக்குமென்று தெரியவருகிறது.

இக்கப்பல் கொலம்பியாவிலுள்ள கார்ட்டகேனுவில் தனதுபணியை நிறைவேற்றிவிட்டு இப்பொழுதுதான் திரும்பியிருக்கிறது. இதற்குமுன்னர் இந்தோனேஷியா, தென்வியற்னும், பேரூ, ஈக்குவேடர், நிக்கறுங்கா ஆகிய பிரதேசங்களில் ஹோப்கப்பல் தொண்டாற்றியிருக்கிறது

Usis News Bulletin

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகளிர் மன்றம்

**அன்புநிறை சோதரிகளே! வணக்கம்!**

பெற்ற அன்னையிலும் பேரன்புகொண்ட நம் பரலோகதாயாம் அன்னைமரி, பவச்சேற்றிலே புரண்டுருளும் பாவிகளான எம்மைப் பரலோக வழியில் கொண்டுசெல்வதற்காக அடிக்கடி பாத்திமா பதி, லூர்துகெபி, சலேத்மலை முதலாம் பல்வேறு இடங்களிலே தரிசனமாகி அருள் பாலித்துள்ளாள். லூர்துகெபியில் காட்சிதந்த அந்த மரியன்னையின் விழாவானது நம் இலங்காபுரியின் பல்வேறு இடங்களிலும் சென்ற இருவாரங்களிலும் அவளின் பக்தர்களால் வெகு பக்திவிமரிசையுடன் கொண்டாடப்பட்டுள்ளது. நம் மகளிர் மன்றச் சார்பாகவும் லூர்துநாயகிக்கு நம் வாழ்த்துக்களைச் சமர்ப்பிப்போமே!...

**பல்லவி**

அலங்கிர்த நாயகி லூர்து மாமரியே!...
இலங்கிடும் வான்பதி வாழெழில் அரசியே!...
துலங்கிடும் தூயவனப்புடை லீலியே!...
கலங்கிடும் ஏழைகள் மேல்கண் நோக்குவாய்!...

ரோஜா மலர்களின் நடுவினிலே — எம்
ராஜன் யேசுவின் அன்னையே நீ!...
நாசஞ் செய்தீமை நின்றெமை மீட்கும்
நல்வழி காட்டிட வந்தாயே!... (அலங்கிர்த)

பெர்ணதேத் என்னும் கன்னிகைக்கே — உன்
பேரெழில் கொஞ்சும் அழகுடனே
லூர்தெனும் மலையின் கெபியினிலே
பார்புகழ் காட்சிகள் தந்தாயே!... (அலங்கிர்த)

சுரந்தே ஓடிய நீரூற்றில் — பலர்
சுகம் பெற அருளைப் பொழிந்தாயே!...
இரந்தே உன்பதம் வேண்டிநிற்கும்
ஈனர்கள் எம்மேலே இரங்குவையே!... (அலங்கிர்த)

— ரோஜா

# துதிப்போம் தூதருடன்!....

**பல்லவி**

பரிசுத்தர்!... பரிசுத்தர்!... தளங்களின் தேவன்!...
பரிசுத்தர்!... பரிசுத்தர்!... தாசரெம் நேசன்!...

**அனுபல்லவி**

பரலோகம் பூலோகம் முழுமையும் உந்தன்
மகிமையில் நிறைந்தே காண்பதும் இன்பம்!...

**சரணம்**

பாவிகள் எமக்காய்ப் பலிப்பொருளாகிடப்
பரலோக பதியையே நீர்துறந்தீர்
ஆவியை யெமக்காய் அன்புடன் ஈந்தீர்
அன்பரே!... உமக்கே ஓசான்ன!...

தாசரெம் ஆன்ம பசியினைப் போக்கத்
தந்தீர் உம்மையே போசனமாய்
நீசரெம் மேலே நன்மையே பொழியும்
நிமலனே!... உமக்கே ஓசான்ன!...

வானோரின் ராஜனே வருகின்றீர் எம்மிடம்
வல்லப தேவனின் நாமத்தினால்
தேனினுமினிய தெள்ளரும் அமுதே
தேவனே!... உமக்கே ஓசான்ன!...

# கடலே! நீ சொல்!...

## கடல் கொண்ட மாட்சி!...

உரையிறந்த பெருமை பெற்றுத் திரைக்கை நீட்டி ஒலித்துக்கொண்டே அக்கிராமத்தின் எல்லைப்புறத்தே தவழ்ந்துகொண்டிருந்தேன் யான். "எறிக்கும் வெய்யிற் சுடரே!... நீ போ!... போ!... இனிக்கும் இன்ப இரவே!... நீ வா!... வா!.." என்பதுதான் என் அலைக்கரங்களின் கீதாஞ்சலி. ஆமாம்!... என் காதலுக்கே வில்லனாக விளங்கும் இந்தச் சூரியன் எப்போது ஒழிவான்?... என் காதலியாம் தேன்மதியாள் எப்போது வானிடை தோன்றுவாள்?... என்று வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தேன். சொன்ன சொல் தவறமாட்டாளே. அதோ!... தோழிகளாம் தாரகைகள் புடைசூழத் தோன்றிவிட்டாளே வெண்ணிலவுப் பெண்ணரசியாள். ஆகா!... முழுமதியாம் அவள் மோகனப் புன்னகையில் ஒருகணம் செயலற்று நின்றேன். அவள் தண்ணொளிக் கரங்கள் என்னை அரவணைத்ததுதான் தாமதம்; ஒரு இன்பச் சிரிப்பு; பொங்கியெழுந்தன வெண்ணுரைகள். போட்டியிட்டன வெண்மணலுடன். சிந்திய நீர்த்திவலைகள் என் விழிகளில் தவழும் ஆனந்தக் கண்ணீராகின. நீலக்கடலாம் என்னையும் எனது வெண் அலைகளையும், நீலவானும் வெண்மேகங்களும் பிரதிபலித்தன. என் மேனியெல்லாம் நிலாவொளியில் தகதகத்தது. தென்னையிளங்கீற்றினூடே தாலாட்டிய தென்றல் மகர தோரணங்களின் இசையைத் தேக்கியது. துள்ளிவிழும் கயல்மீன்கள் தீபங்களாய் வேடிக்கை காட்டின. பொங்கிய அலைகளில் மின்னிய சங்குகளும், ஊரிகளும், முத்துக்களும் என் காதலியின் கழுத்தில் நான் அணிவிக்க விழைந்த மாலைகளாகக் கோர்வை கட்டின. என் எழிலைக்கண்டு நானே பரவசமடைந்தேன். அகந்தை தலைக்கேறியது; என் அழகை விஞ்சிய காட்சி ஏதாவது உண்டா இப்பூவுலகில்?.... என மேட்டிமையாக வினவெழுப்பினேன். "களுக்" என்று சிரித்தாள் வெண்ணிலவு மங்கையாள். ஏன்தான் சிரித்தாளோ?... அலட்சியமாகத் திரும்பிப் பார்த்தேன் அக்கிராமத்தை.

## கண்கொள்ளாக் காட்சி!...

ஆ!... இதென்ன!... மற்றொரு கடல் வெள்ளம் என்னுடன் போட்டியிட வருகின்றதோ?... ஆமாம்!... என்னை நோக்கிப் பெருகிவந்தது மக்கள் வெள்ளம். உரையிறந்த பெருமை பெற்றேன் என்று அகங்கரித்தேனே, இதோ!... எண் கடந்த ஜனத்திரள் நிறைந்து வழிகின்றதே. மக்கள் வெள்ளத்தின் மேனியில் திகழ்ந்த வெண்ணுடைகளின் தூய்மையோ அவர்கள் அகத்தின் தூய்மையைப் புறத்தே காட்டி, என் அலைகளின் வெண்ணிறத்தைத் தோற்கடித்தன. அவர்கள் விழிகளில் அரும்பிய ஆனந்தபரவசக் கண்ணீர் முன்னே என் நீர்த்திவலைகள் எம்மாத்திரம்?... பரலோக அன்னையை வாழ்த்த அவர்களது உதடுகளினின்றெழுந்த "ஆவே மரியா" கீதம் என் அலைகளின் ஓசையை அடக்கின. அவர்கள் கைகளில் மிளிர்ந்த மணிமாலைகளோ என் சங்குகளின் மாலையைப் பழித்துக் காட்டின. ஊர்வலம்வந்த தெருக்களின் இருபுறத்தையும் பச்சைவர்ணத் தோரணங்களும், வெண்ணிறத்துவசங்களும் அலங்காரஞ் செய்தன. மக்கள் வெள்ளத்தின் கரங்களில் திகழ்ந்த "மினுக், மினுக்" மெழுகுவர்த்திக் கூண்டுகளின் புன்னகையைக் கண்ட கயல்மீன்கள் வெட்கி நாணி என்னுள்ளே ஒளிந்துகொண்டன. இத்தனை ஆரவாரஞ் செய்யும் ஜனக்கடலின் காதலிதான் யாரோ?... என உற்று நோக்கினேன். அதோ!...என் காதலியைவிடப் பன்மடங்கு ரூபலாவர்ண்ய சௌந்தர்யவதி எழுந்தருளி வருகின்றாளே!... அந்த லூர்துநாயகியின் வதன ஒளிப்பிரபையில் என் கண்கள் கூசின. என் காதலியாள் சந்திரப்பெண்ணிலும் களங்கமுண்டே. ஆனால் இதோ!... ரோஜா மலர்களினால அலங்காரஞ் செய்யப்பட்டுவரும் அந்த ரூபவதியில் அற்ப மாசுமறுகூட இல்லையே!... அவள் கண்களில் தான் எத்தனை கனிவு!... உடையில் தான் எத்தனை அடக்கம்!... நீலவர்ணக் கச்சில் தான் எத்துணை கற்பின் பொற்பலங்காரம்!... குவிந்திருக்கும் கைகளில் தான் எத்துணைப் பக்திப்பரவசம்!... மக்கள் வெள்ளத்தின் கரங்களுமல்லவா அந்தப்பக்தியைப் பிரதிபலிக்கின்றன. அந்த அழகுக் கரங்களில் துலங்கிய மாசு மண்ணோரை விண்ணேற்ற விடப்பட்ட வடமாகவல்லவா ஆடி நிற்கின்றது!... ரோசாமலர்ப்படுக்கை பாதத்தில்... மலர்வில்லு மேனியைச்சுற்றி... அதனூடே ஒளிகான்ற பலவர்ண மின்சார தீபங்கள் என் காதலியின் தோழிகளாய்நின்ற தாரகைகளைப் பழித்தன. ஜனக்கடலின் கண்களோ அடிக்கொருதாம் திரும்பிப்பார்த்து அந்த அலங்காரநாயகியின் எழிலில் திளைத்தன. அன்னையின் அன்புக்கரங்களின் அரவணைப்பில் பொங்கிப்பூரித்தன பக்தர்களின் இதயகமலங்கள். என்ன!... என் அழகின் ஒவ்வொரு அம்சத்திற்குமே சவால் விடும்போட்டியா?...

## கெபி தந்த மீட்சி!...

இந்த அழகுக் காதலியுடன் அந்த ஜனக்கடல் எங்கேதான் போய் சங்கமிக்கப் போகின்றதோ?... ஓகோ!.. என்னருகே கம்பீரமாகக் காட்சிதரும் கெபியை நோக்கித்தானே!... இத்தனை நேரம் என் கர்வத்தில் இந்தக் கருங்கல் கெபியின் காட்சியைக் கவனிக்கவில்லையே!... மகரதோரணங்கள், நீல வெண்ணிறக் கொடிகள் தென்றலில் அசைந்தாடின விழாக் கோலத்தில் அங்கேயும் எள்ளிட இடமின்றி மக்கள் வெள்ளம். "ஆவே மரியா" கீதத்தை அப்படியே வானளாவ ஒலித்தன ஒலிபெருக்கிகள். "பால்நிலவே உன்னொளி வேண்டாம். இதோ பக்தர் நாமிருக்கிறோம்" என்று கூறி இரவைப் பகலாக்கின மின்சார தீபங்கள். வந்துகொண்டிருந்த ஜனக்கடல் அங்கே நின்றுகொண்டிருந்த மக்கள் வெள்ளத்துடன் ஐக்கியமாகியது. மீண்டும் மீண்டும் பக்திப்பரவச கீதங்கள். விண்ணுலக சம்மனசுகளிலும் மாட்சியுற்ற குரவர்பலர் வானம்பாடிகளாய்க்கானம் பாடித்திரிந்தனர் அந்தத் தென்னைமரச் சோலையூடே. குரவர் ஒருவர் வெண்மேகம் தந்த மழைமாரியெனப் பொழிந்தார் சில சொற்றொடர்களை. அவ்வெளியில் பரந்துகிடந்த கருங்கற்கள் உருகின. கல்மனங்களும் இளகின. பாவிநானுமகூட உருகினேன். என் அகந்தையை எண்ணக் கண்ணீர் விட்டேன். என் துயரில் பங்குகொள்ள "என் தோழர்கள் வருவார்களோ" என எதிர்பார்த்தேன்; அவர்களோ அன்னையின் சேவை செய்ய எப்போதோ போய்விட்டிருந்தனர். தென்னையிளங்கீற்றினூடே என்னைத் தாலாட்டிய தென்றல் இப்போது அங்கு கூடிநின்ற பக்தர்களுக்குச் சுகானுபவத்தை வீசும் பணியில் ஈடுபட்டிருந்தது. எனது வெண்ணிற அலைகளோ கெபியின் பாதத்தை முத்தமிட்டுக் கொண்டிருந்தன. அவற்றின் சிற்றின்ப இசை மங்கிப்போய் "ஆவே மரியா" கீதத்தை ஜனக்கடலுடன் சேர்ந்து மீட்டுக் கொண்டிருந்தன.

## விண் தந்த சாட்சி!...

சரிதான்!... என் காதலி வெண்ணிலவானது எனக்காகக் காத்திருப்பாளா என்று விண்ணுலகை நோக்கினேன். அங்கே அவளையும் காணோமே!... எங்கே போயிருப்பாளோ?... என்று எண்ணினேன். அதற்குள் நான்கண்ட காட்சி!...லூர்து அன்னை மாமரி விண்ணிலே காட்சியளித்தாள் சர்வாலங்கார பூஜிதையாய். என் காதலியோ பிறைவடிவெடுத்து அவள் பாதாரவிந்தங்களில்சேவைசெய்துகொண்டிருந்தாள். அவளது தோழியராம் தாரகைகள் அவள் சிரசின் கிரீடமாகத் திகழ்ந்தன. என் வில்லனான சூரியனோ அவள் ஆடையை ஒளிரச் செய்துகொண்டிருந்தான். வானலோக தூதர் குழாம் மண்ணுலகிலிருந்து எழுந்த "ஆவே மரியா" கீதத்தைத் தாமும் எதிரொலித்தது. "**ஊர்வலமாக ஜனங்கள் என் பதிக்கு வருவதைக்காண விழைகிறேன்**" என்று அன்று லூர்துபதியில் கூறிய அன்னையோ கெபியின் வைபவத்தை ரசித்துக் கொண்டிருந்தாள். அந்த ஜனக்கடலிலிருந்து எழுந்த ஒவ்வொரு செபமாலை ரோஜா மலர்த்தண்டிலும் இணைக்கப்பட்டிருந்த விண்ணப்பங்களை அன்னைமரி கைநீட்டி ஏற்றுக்கொண்டாள். "என் கணவன் தீய வழியில் செல்கிறாரே!... அவர் மனதைத் திருப்பமாட்டாயா" என்று வேண்டினாள் ஒரு பதிவிரதை. "ஆடம்பர வாழ்வைக் கேட்கவில்லை. அன்றாடக் கஞ்சிக்கு வழிசெய்யம்மா?... என்றிரந்தான் ஒரு குடும்பத் தலைவன். "படித்துப் பட்டம் பெற்றும் வேலையற்றிருக்கும் அண்ணாவுக்கு ஒரு வேலைகொடுதாயே!... என்றாள் ஒரு தங்கை. "இரவு விடியினும் விடியாக் கஷ்டத்தில் தவிக்கும் என் அக்காமேல் இரங்கம்மா" என்று கைகுவித்தான் ஒரு தம்பி. "என் மைந்தனுக்கு ஒரு குணவதியை மனைவியாகக் கொடுத்து என் வம்சம் விளங்கச் செய்" என்று கையெடுத்தாள் ஒரு அம்மா. "கொழுகொம்பற்ற நிலையில் வாடும் என் செல்விக்கு மாங்கல்ய பாக்கியம் அருள்வாய் தாயே என்று வேண்டி

[தொடர்ச்சி மறுபக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேசுவின் திருப்பாடுகளின் சித்திரம்



### இறுதி இரவு உணவு

கையிலே அப்ப மேந்திக்
கருணையின் வடிவ மானோன்
அய்யனை மனதில் எண்ணி
அருகுள சீடர் நோக்கி
'மெய்யாகவே இஃக தென்றன்
மாமிசம் இதை யெடுத்துச்
செய்யுங்கள் உணவு' என்றார்
செகமெலாம் பிழைக்க வேண்டி!

'புதிய ஏற்பாட்டின் படி
பூமியிற் சிந்தப் போகும்
இதுஎன் இரத்த' மென்று
இனிய கனிரசத்தை ஏந்தி
புதுமைக்கும் புதுமையானோன்
புகன்றதை அவர்க் களித்து
'இதை யென் ஞாபகமாக
இயற்றுங்கள்' எனப் பணித்தார்!

'என்னை யின்றிர வொருவன்
எதிரிக்கு விற்பா' னெனச்
சொன்னதும் யேசு பிரான்
சுடுதீயில் மிதித்தவர் போல்
பன்னிருவரில் ஒருவன் போக
பதைத்து மிகமற்றை யோர்
'என்னையா சொன்னீ ரெ'ன்று
ஏக்கமாய்க் கேட்டு நின்றார்!

கடைசியில் இருந்த ஒருவன்
கள்ளமாய் அவரை நோக்கி
'அடியேனா' என்று கேட்க
அவனுக்கு சேசு பிரான் [எனத்
'தடையென்ன நீயே சொன்னாய்'
தானவன் செவியிற் போட
நடையினைக் கட்டினான் அந்த
நாசகாலனாம் யூதாஸ் காரியோத்!

இவையெல்லாம் முடிந்த பின்னர்
இனிவருவ தெல்லாம் அறிந்து
அவையெல்லாம் ஏற்கத் தன்னை
ஆயத்தஞ் செய்ய எண்ணி
அவையினில் இருந்த தம்
அன்பரில் மூவ ரோடு
தவமது செய்ய அந்தத்
தருவனம் நோக்கிச் சென்றார்!

### (பூங்காவனத்தில்)

சிலகாத தூரத்தில், வந்த
சீடரை நிறுத்தி விட்டு
அலை கடல் உள்ளமாக
அவ்வனம் நுழைந் தெதிரே
மலையென வருந் துயரை
மனதிலே எண்ணி மேலும்
நிலை குழம்பி நின்றார்
நிலையாக வாழுந் தேவன்!

உலகத் தோர் செய்தபாவம்
ஓரிருள் உருவாய்த் திரண்டு
கலக்கத்தில் இருக்குந் தேவன்
கண்முன்னே தோன்றி உன்
நிலையினைப் பார்; இதனை
நீ சுமந்தாக வேண்டும்; எனக்
கலகல வெனச் சிரித்துக்
கணத்தினில் மறையக் கண்டு,



உடலெல்லாம் இரத்த வெள்ளம்
ஓட அவர் சோர்ந்து வீழ
கடலென வான தூதர்
கடவுளின் மைந்தன் தன்னை
இடம் வலமாகச் சூழ்ந்து
இதமான மொழிகள் கூறி
உடனவர் இருந்து ஏற்ற
உதவிகள் செய்து நின்றார்!

தந்தையை மீண்டுந் தொழுது
தாங் கொணுத் துயரத்தால்
'இந்தப் பாத்திரம் எனைவிட்டு
ஏகினால் ஏகட்டும்; ஆயின்
எந்தன் மனப்படி யல்ல
இது உன் சித்தமானால்
எந்தையே இதனைச் சுமக்க
எனக்கருள் செய்யு' மென்றார்!

விண்ணும் மண்ணும் ஏத்துந்தேவன்
வேதனைதாழ வெளியே வந்து
கண்ணுறங் குந்தம் சீடரைக்கண்டு
கவலை பெருகக் கண்ணீர்சிந்தி
'என்னோடு ஒருமணி உங்களால்
விழித்திருக்க முடியாமற் போனதோ'
என்று உளம் நொந்து அவர்க்கு
இவைகளை மேலே சொல்வார்;

'உலகம், சரீரம், பிசாசு எனும்
உன் னெதிரிகளிட மிருந்து
விலகி நீ நிற்க விழித்து
வேண்டுங்கள் பிதாவை' யென்று
நலஉரை பகர்ந்து சென்று
நாழி ஒன்றுவதற் குள்
தலைவைத்துப் படுத்தார் சீடர்
தலைவனும் செபத்தி லாழ்ந்தார்!

திரும்பவும் சேசு வந்து
சீடர்கள் தூங்கக் கண்டு
கரும்புபோல் மொழியா லவரைக்
கண் விழிக்கச் செய்து
பெரும்படை யோடு தம்மைப்
பிடிக்கவரும் எதிரிகளின்
வரவினைக் கூறி அவர்
வருகையை நோக்கி நின்றார்!

(வளரும்)

## இந்திய ஆடுஇறக்குமதி

இந்தியாவிலிருந்து ஆடுகள் இறக்குமதிசெய்ய அரசாங்கம வழங்கிவந்த அந்நியசெலாவணியை இவ்வருடமுதல் நிறுத்தியுள்ளது. சென்றவருடத்தில்மட்டும் இதற்கென ஒருகோடி ரூபாவரை அந்நியசெலாவணி வழங்கப்பட்டது. தகரங்களில் அடைத்த மாமிசவகைகளை இறக்குமதி செய்வதற்கான அந்நிய செலாவணியையும அரசாங்கம் நிறுத்திவிட்டது.

## ரூஷிய சிமெந்து

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள சிமெந்துத்தட்டுப்பாட்டைச் சமாளிக் குமுகமாக அடுத்தபத்துமாதங்களிலும் மாதம்ஒன்றுக்கு 20,000தொன் விகிதம் சிமெந்தை ரூஷியாவிலிருந்து தருவிக்க ஒழுங்குசெய்யப் பட்டிருக்கிறது. இலங்கைச் சிமெந்துக் கார்ப்பரேஷன் தனதுசிமெந்துச்செய்கை இலக்கை அடையத்தவறியமைதான் இங்கே சிமெந்துத்தட்டுப்பாடு ஏற்படக் காரணமாகும்.

* * *

● ஒருவரிலிருந்து மற்றொருவருக்கு மாற்றுஇருதயம் பொருத்தும்முறையில் இப்பொழுது பிரான்சியவிஞ்ஞானிகள் மற்றுமொரு புதியமுறையைக் கையாளுகின்றார்கள். இறந்தவர் ஒருவரின் இருதயத்தைப் பெயர்த்தெடுத்துக் குளிர்சாதனப் பெட்டியில்வைத்துத் தேவைப்படும்போது பாவிக்க அவர்கள் வழிபண்ணுகிறார்களாம்.

## கல்முனை இடைத்தேர்தல்

தேசியஅரசாங்கம் பதவிக்குவந்தபின பதின்மூன்றாவது இடைத்தேர்தலான கலமுனைதொகுதி உபதேர்தல் சென்ற18ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, இதிலே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச்சேர்ந்த ஜனுப் எம். சி. அகமது1,254அதிகப்படியான வாக்குகளால வெற்றியீட்டியுள்ளார்' இவர் 10,599வாக்குகளும், தமிழரசுக் கட்சியைச்சேர்ந்த ஜனுப மசூர் மௌலானு 9,345வாக்குகளும, சுயேச்சை அபேட்சகர் ஜனுப எம. ஏ. எல். காரியப்பர் 1,237வாக்குகளும, தமிழின விடுதலைஇயக்க அபேட்சகர் திரு. எம். மாணிக்கம்457வாக்குகளும் பெற்றுக் கொண்டார்கள்.

2-ம் வத்திக்கான்

## இறைவனின் வார்த்தையை படித்தல் வேண்டும்

எனவே,
குருகுலத்தார் அனைவரும்
சிறப்பாக,
கிறிஸ்துவின் குருக்களும்
மறைப்போதகத்தில்
உரிமையுடன் பங்குபற்றும்
மறைக்கல்வி ஆசிரியர்,
திருத்தொண்டர் போன்ற பிறரும்
திருநூலை ஆர்வமுடன் படித்துக்
கவனமுடன் ஆராய்ந்து பின்பற்றல்
இன்றியமையாதது.
ஏனெனில்,
இறைவனின் வார்த்தையினது
மிகுந்த செல்வங்களைத்
தங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட
விசுவாசிகளோடு முக்கியமாகப்
பொதுவழிபாட்டின வழியே
இவர்கள் பங்கிட்டுக் கொள்ளும்போது
"இறைவனது வார்த்தைக்கு
உள்ளத்தில் செவிசாய்க்காது
வெளித் தோற்றத்திற்கு மட்டும்
வீண் போதகர்களாக" (அகுஸ்தீனார்)
இவர்களில் யாரும்
இருக்கக் கூடாது.
இதுபோலவே,
இறைநூலை அடிக்கடி
படிப்பதன் மூலம்
"இயேசுக்கிறிஸ்துவின்
உன்னதமான அறிவை" (பிலி. 3: 8)
பெற்றுக்கொள்ளும்படி
கிறிஸ்தவ விசுவாசிகள் எல்லோரையும்
சிறப்பாகத் துறவிகளையும்
இத் திருச்சங்கம்
மிகவும் தனிப்பட்ட முறையில்
தூண்டுகிறது.
ஏனெனில்,
திருநூலை அறியாமல் இருப்பது
கிறிஸ்துவை அறியாமலிருப்பதாகும்.
ஆகவே,
இறைவனின் வார்த்தையே
அதிகமாகக் கொண்டுள்ள
பொதுவழிபாட்டின் மூலமோ,
திருநூலை இறைப்பற்றுடன்
வாசிப்பதன் மூலமோ,
ஏற்ற அறிவுரைகள் மூலமோ
திருச்சபை
ஆயர்களின் கவனத்துடனும்,
ஒப்புதலுடனும்
இன்று எங்கும்
புகழ்ச்சிக்குரிய முறையில்
பரவிவரும்
பிறவழிவகைகள் மூலமோ
அவர்கள் விருப்புடன்
திருநூலை அண்டிச்செல்ல வேண்டும்.
இறைவனுக்கும்
மக்களுக்குமிடையே நடைபெறும்
உரையாடலாக அமையும்பொருட்டுத்
திரு நூலை வாசிக்கும்போது
அவர்கள் செபிக்கவும் வேண்டும்
என்பதை
நினைவில் இருத்திக் கொள்ளட்டும்.
ஏனெனில்,
"நாம் செபிக்கும்பொழுது
அவருடன் பேசுகிறோம்;
இறைவனின் வார்த்தையைப்
படிக்கும்பொழுது
அவர் பேசுவதைக் கேட்கிறோம்"
(அர்ச். அமிர்தநாதர்). (25)

● மனிதஇருதயம்ஒன்றை மற்றொருவருக்குப் பொருத்தும் சத்திரசிகிச்சைஒன்று பம்பாய்நகரிலுள்ள எட்வாட்மன்னர் ஞாபகஆஸ்பத்திரியில் சென்ற20ஆம்திகதி செய்யப்படலாயிற்று. இந்தஇருதயம் மூன்றுமணி நேரம் நன்றாகஇயங்கியும் சுவாசப்பைக் கோளாறினல் அந்தமனிதர் இறந்துவிட்டார். உலகில்நடைபெற்ற ஆறுவதுமாற்றுஇருதய சத்திரசிகிச்சை இதுவாகும்.

> செபமாலை செபிக்கும் சேவை ஒன்றை நமக்குக் கொடுங்கள்; நாம் உலகத்தையே வெற்றிகொள்வோம்.
> — 11-ம் பத்திநாத பாப்பரசர்

## மரண சங்கதி

### திரு. பீற்றர் அம்புரோஸ் கனகரத்தினம்

இவர் சாவகச்சேரியை ஜெனனபதியாகக் கொண்டவர். ஓர் உத்தமகத்தோலிக்க ஆசிரியர். இவருடைய பக்திவிசுவாசத்தால் யாழ்ப்பாணக் கத்தோலிக்க ஆசிரியர்கள் மத்தியில் கத்தோலிக்க சேவைசெய்து வந்தார்.

அன்பு, தயை, இன்சொல், காரியசித்தி யாவும் நிரம்பப்பெற்ற இவரை வண. ஞானப்பிரகாசம் சுவாமியார் தனது நல்லூர் மீசாமில் ஒரு தலைமையாசிரியராக ஏற்றார். உரும்பிராய் சம்மிக்கேல் பங்கில் வண. அடிகளார் ஊன்றியவித்தை நீர்ஊற்றிப் பசளையிட்டு பதினேழு வருடங்கள் வளர்த்தார்.

இவர் 1-2-68-ல் ஏழாலை அமலவிலாசத்தில் தனது 89-ம் பிராயத்தில் அந்திய தேவதிரவியானுமானங்கள் யாவும் குறைவறப்பெற்று நித்திய சமாதானத்தில் சயனித்தார். இவரை இழந்து வருந்தும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் நாமும் அனுதாபப் படுகிறோம்.

R. I. P.

## கடலே! நீ சொல்!

[மகளிர்மன்றத் தொடர்ச்சி]

னார் ஓர் அப்பா. "நான் நல்லாகப் படித்துப் பாஸ் பண்ணச் செய்" என்றாள் ஒரு மாணவி. "மாதாச்சி!...... தாயே... நல்ல சோம்குடு!... என்றது ஒரு பாப்பா. அத்தனைபோது கண்ணீரையும் துடைத்தாள் அன்னை. மன மகிழ்வுடன் திரும்புகின்றனர் அனைவரும்.

### அன்னை தயையின் நீட்சி!

எங்கோ தூரத்தில் வசிக்கும் கிழவியொருத்தி அம்மா!... உன் பதிக்கு வர முடியவில்லையே!... என் மேல் இரங்கு!...என்று வேண்டுகிறாள். அவளுக்கும் அருள் பாலிக்கிறாள் அந்தத் தாய்மரி. வைத்தியசாலையொன்றில் பிரசவவேதனையில் துடிக்கிறாள் பெண்ணொருத்தி. அம்மா!... அடுத்தவருடம குழந்தையுடன் உன்னிடம் வருவேன் தாயே!... என்று அன்னைபதியை நினைந்து வேண்டுகிறாள். அன்னையின் கருணையில் அடுத்த நிமிடம் அவள் கரங்களில் தவழ்கின்றது ஒரு அழகிய குழவி. அதோ!... பெண்ணொருத்தி!... வந்ததும் வாராததுமாக இரண்டு திரிகளைக் கொழுத்திவிட்டு அன்னையை ஏறெடுத்துப் பார்த்துவிட்டு விரைந்து செல்கிறாள். "ஏதடா அவசரக் குடுக்கையாயிருக்கிறதே. வேண்டா வெறுப்பாக, கடமைக்காக இரண்டு திரிகளைக் கொழுத்திவிட்டு ஓடுகிறதே. வந்தவள் ஒரு ஜெபம் சொல்லக்கூடாதா" என்று முணுமுணுக்கிறேன் என்னுள். "தாயில்லாப் பிள்ளை எனக்கு அம்மா நீயல்லவா!... வீட்டில் கடமைகள் காத்திருக்கின்றன. என் கஷ்டம உனக்குத் தெரியுமே அம்மா!...இருந்து ஜெபிக்க நேரமில்லையே!... போய்வரட்டுமா?...... என்று அவள் இதயத்திலிருந்து எழுந்த வார்த்தைகள் என்காதில் விழவில்லைத்தான். ஆனால் அந்தப் பரலோக அன்னை அவள் கஷ்டத்தை உணர்வாளல்லவா?...ஆகவேதான் தன்செல்வி போகும் திசைநோக்கிப் புன்முறுவல் பூத்தாள். அருட் கொடைகளைப் பின்னாடி அனுப்பியும் வைத்தாள். ஆம்!... கடைசியில் எல்லோருமே போய்விட்டார்கள். அகந்தை அழிந்த நானோ அன்னையின் பதியைவிட்டு அகலவே மாட்டேன். அன்றொருநாள் அன்பர் யேசுவின் பாதத்தைத் தன் கண்ணீரால் கழுவிக் கூந்தலால் துடைத்த மரியமதலேனாளைப்போல என் அலைக்கண்ணீர்களால அவள் கெபியைக் கழுவி வெண்மணற்கூந்தலால் துடைத்து என் வாழ்நாளெல்லாம் அவளுக்கே சேவை செய்யப்போகிறேன். சரி!... விடை பெறட்டுமா?...

(கடல் சொன்ன காதை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவின் துயரினிலே!....

"உறவு என்றொரு சொல் இருந்தால் பிரிவு என்றொரு துயர் இருக்கும்" என்ற கூற்றின் உண்மையை சங். கன்னிகை கொலம்பானஸ் அவர்களின் பிரிவிலே யாழ்நகர் கன்னியர் மடம் உணர்ந்துகொண்டது என்றால் அது மிகையாகாது. ஈழநாட்டிலே சேவைபுரிய வந்த இந்த அழகிய கன்னிகாஸ்திரீயின் சேவையை அவர் இங்கே தங்கியிருந்த நாற்பத்தேழு வருடகாலத்திலும் பெற்றுக்கொண்ட அதிர்ஷ்டம் பெற்ற யாழ்நகர் திருக்குடும்பக் கன்னிகாமடமோ இன்று தாயகம் திரும்பிச் செல்லும் அன்னார் பிரிவில் மீளவொண்ணாத் துயருற்று நிற்கின்றது. நாற்பத்தேழு வருடங்கள்!... ஆம்... மிகவும் நீண்டகாலமல்லவா?...இறைவனின் சேவைசெய்யத் தன் உற்றார் உறவினரைத் துறந்தாள். ஈழநாட்டில் பணிசெய்யத் தன் தாயகத்தையே துறந்துவந்தாள். ஆனால்!... பாசங்கொண்ட உள்ளமுடைய இக் கன்னிகையோ நம்மவரைப் பிரிந்தபோது பெருகிவந்த கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் கலங்கினாள். ஆம்!... இந்த நாற்பத்தேழு வருடகாலத்தில் நாமெல்லாம் அவள் உற்றார் உறவினராகி விட்டோம் என்றால் அது பொய்யாகிவிடுமா?...

1920-ம் ஆண்டளவில் நம் யாழ்நகர் நாடிய கன்னிகை கொலம்பானஸ் இளமையின் பூரிப்பில், மோட்சவானில் துலங்கி நிற்கும் ஒரு சம்மனசுபோன்ற எழிலுறு வனப்புடன் காட்சிதந்தாள். இதை நான் சொல்லவில்லை. அன்று துள்ளியோடும் மழலைகளாய் அவளிடம் பாலர் களரியில் கல்விபயின்று இன்று தமது ஆசிரிய பதவியின் 25-ம் வருட வெள்ளி யூபிலியையும் கண்டு களித்து அன்னார் பிரிவையும் கண்ணீரூடே கண்டு கலங்கும் ஆசிரியைகள் சிலர் சொல்லுகிறார்கள். ஆம்!... அவள் முழுமதிபோன்ற வதனமும், மோகனப் புன்னகையும் இன்று அவள் நம்மைப் பிரிந்தபோதும் மாறவில்லை. அகத்தின் அழகு முகத்தில் தெரியுமல்லவா?... அக்கன்னிகை கொலம்பானஸ் அவர்களின் தூய்மையான இதயம், நேர்மையான நெறியைத்தான் அவர்கள் முக எழில் பிரதிபலித்தது. சம்மனசு போன்றவதனம் மட்டுமா உடையவளாயிருந்தாள். அவளது வாயினின்று புறப்படும் இனியகானம் வானுலக தூதரின் இசையின் எதிரொலி. பியானோ வாத்தியங்களில் அவள் விரல்கள் தாளமிட எழும் நாதாஞ்சலியோ பாலர் களரிச் சிறுவரைத் துள்ளிக் குதிக்க வைக்கும். அவர்கள் மட்டுமா துள்ளுவார்கள்?... கன்னிகை கூட நடனமாடுவாள் அவர்களுடன். யாழ் நகர் கன்னிகாமடத்தில் ஒரு விழா என்றால் சங். கன்னிகை கொலம்பானஸினால் உருவாக்கப்பட்ட பாடல்கள், நடனங்கள் போன்ற சங்கீத நிகழ்ச்சிகள் பல அதில் இடம்பெறுமலலோ!

பியானோ வாத்தியக்கலையை மாணவிகளுக்கு அவள் போதிக்கும் ஆர்வம் இறுதிப் பரீட்சையில் 100% நிறைவுச் சித்திகளை அள்ளிக்கொடுக்கும். யாழ்நகர் கன்னிகாமடத்தில் கல்விகற்ற ஒவ்வொரு மாணவியும் ஒவ்வொரு ஆசிரியையும் அவள் திறமையையும், அன்பையும், கனிவையும் பற்றி அறிவார்கள்.

கன்னிகை கொலம்பானஸில் நம்மைக் கவர்ந்த மற்றொரு அம்சம் புனிதத்தின் சிறப்பேயாகும். புனிதம் மோட்சவாசிகளின் பொக்கிஷமன்றோ! ... கன்னிகையின் அறையோ மோட்ச புனிதத்தால் துலங்கும். அவள் கைவேலைகள் ஒவ்வொன்றிலும் அழகும் புனிதமும் மிளிரும். தன்னிடம் வருபவர்களிடம் கூட அந்தப் புனிதத்தை ஊட்டிவிடுவாள் அன்னை. ஆயிரந்தடவை அழுத்தத் துடைத்த பின்னும் அழுக்கு உண்டோ என்று பார்ப்பாளென்றால் அவள் இதயம் எத்துணை பரிசுத்தமாய் இருக்கும் என்பதை உணரமுடியுமே.

அன்னை கொலம்பானஸ் நாற்பத்தேழு வருடகாலங்கள் தொண்டாற்றிய யாழ்நகர் கன்னிகாமடத்தின் ஒவ்வொரு தூணுக்கும், ஒவ்வொரு சுவருக்கும் வாயிருந்தால் இன்று அவள் சேவையை எடுத்துப்போற்றும். நாற்பத்தேழு வருடமும் அவளது அன்பை அனுபவித்தவர்கள் முதல் ஒரு சில நாட்கள்தான் அவளது அன்பை அனுபவித்தவர்கள் வரை வேறுபாடின்றிக் கலங்குகின்றனர் அவள் பிரிவில். ஒவ்வொருவரையும் கட்டி அரவணைத்து அன்பு முத்தமீந்து பிரியாவிடை பெற்றாள் கன்னிகை கொலம்பானஸ். வானூர்தி அவள் தாயகம் அவளைக் கொண்டு சென்றுவிட்டது. ஆனால், அவள் நினைவோ நீங்காத நினைவாக, அவள் அழகுமுகமோ கனவுகளிலும் காட்சிதரும் அம்சமாக நம் இதயங்களில் நிலைத்துவிட்டது. சங். கன்னிகை கொலம்பானஸின் 47 வருட சேவையை யாழ்நகரில் யார்தான் மறந்துபோக முடியும்! அன்னார் என்றும் நீடூழிவாழ்க!... அவள் புகழ் நம்மிடை நிலைத்து நிலவுக!...

— செல்வி ரோஜா சாமுவேல்

# தவமா? தயக்கம் ஏன்?

தொகுப்பு: இ. பேர்ணுட்

தவத்தின்காலம் சமீபித்திருக்கிறது. தவம் என்றதும் கானகம் சென்று காவியுடுத்துக் கடுந்தவம் புரிவதல்ல தவம். தவத்தைப்பற்றிப் பெரியோரும் அறிஞரும் பேசியசில உண்மைகளை இங்கு பார்ப்போம்.

தவம் என்பது தன் ஆசையைக் கெடுத்தலேயாகும்.

— ஓர் அறிஞர்.

தவம் செய்வார் தம் கருமம் செய்வார் மற்றல்லார்; அவஞ் செய்வார் ஆசையுட்பட்டு.

— வள்ளுவர்.

மனித வாழ்விற்கு தவமே நிலைக்களன். அதுவின்றி உண்மை வாழ்வெனும் மாளிகையைக்காண ஒருவராலும் முடியாது.

— ஓர் அறிஞர்

உடன் பற்றொழிய ஒருபற்றுமில்லை உடையவனே.

— பட்டினத்தடிகள்.

தவம், சாதனை இவற்றின் வலிமையைக் கொண்டுதான் மனிதன் உயர் நிலையடைய முடியும்.

— தாகூர்.

தவம் செய்யுங்கள் மோட்சராச்சியம் சமீபித்திருக்கிறது.

— ஸ்நாபக அருளப்பர்.

உன் உள்ளத்தைப் பண்படுத்திக் கொள்; அதற்காகக் கானகம் செல்ல வேண்டியதில்லை. உள்ளமாகிய விடுதியில் அந்த அமைதிக் குடிசையில் அமர்ந்து சிற்றின்பங்களுக்கு இடமளியாது உயர்ந்த சிந்தனை செய்.

— மார்க் அரேலியர்.

# கருதினல் கிருசியாஸ் அடிகளாரின் அறிவுரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"எதிர்ப்பு இருப்பது வளர்ச்சிக்கு அவசியம். ஆகவே, எமக்கு எதிரான சக்திகளை நாம் காணும் போது பயந்தோடிவிடக்கூடாது. பொறுமையுடனும், நல்மனதுடனும் வரும் எதிர்ப்புகளை நாம் மேற்கொள்ள வேண்டும்" என்றார் கருதினலவர்கள்.

# இலங்கைக்குப் புறப்படவிருக்கும் வைத்தியக் கப்பல் 'ஹோப்'

மிதக்கும் வைத்தியசாலையான அமெரிக்காவைச் சேர்ந்த 'ஹோப்' மார்ச் மாதம் 6-ம்தேதியன்று புளோரிடாவிலிருக்கும் லாடர்டேல் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு ஏப்ரல்மாதம் 15-ம் தேதியன்று இக்கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

ஹோப் வைத்தியக் கப்பல் மேற்கொள்ளும் எட்டாவதுதிட்டம் இதுவாகும். வைத்திய வசதிகளை அளிப்பதுடன் மட்டுமல்லாமல், உள்நாட்டு வைத்தியர்களுக்கும் பயிற்சிகளை இக் கப்பலில்வரும் விற்பன்னர்கள் கொடுப்பார்கள். இலங்கையைநோக்கி இம்முறை இக்கப்பல் மேற்கொள்ளும் பயணம் இதுகாலவரை மேற்கொண்ட பயணங்களைவிட அதிக சிறப்புடையதாகவிருக்கும்என்று அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

"இம்முறை இலங்கைக்குச் செல்லும் திட்டம் மிகவும் மேலான திட்டமாகவிருக்கப் போகிறது. இதில் செல்லும் வைத்திய அதிகாரிகளின் தொகையும் அதிகரிக்கப் பட்டிருப்பதுடன் பல நூதனமான கருவிகளும், பொறிகளும் இப்பொழுது இக்கப்பலில் பொருத்தப் பட்டிருக்கின்றன" என்று ஹோப் வைத்திய உதவித்திட்டத்தைப் பத்து வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்த டாக்டர் உவில்லியம் பி. வால்ஷ் அவர்கள் தெரிவித்தார்.

இக்கப்பலில் மொத்தம் 150 டாக்டர்கள் எப்பொழுதும் கடமை பார்ப்பார்கள். அத்தோடு இவர்களில் பெரும்பாலானோர் கொழும்பிலும் கண்டியிலும் வைத்திய பணிகளைப் புரிவார்கள். இலங்கை மருத்துவ கல்லூரி மாணவர்களையும் இவ்விரு நகரங்களிலும் இவர்கள் பயிற்றுவார்கள்.

வைத்தியத் துறையில் பூரணமான அம்சங்கள் அனைத்தையும் ஒருங்கே கொண்டது ஹோப் கப்பல். பொது மருத்துவம், தாதிப்பயிற்சி, தந்தரோக கட்டுப்பாட்டு முறைகள், மற்றும் இன்னோரன்ன வகைகளில் தொழில்நுட்ப வல்லுநர்களைப் பரஸ்பரம் பரிமாறி அவ்வத்துறையில் அபிவிருத்தி பெறுவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதே ரீதியில் கொழும்பில் இக் கப்பல் தங்கியிருக்கின்ற காலத்தில் பூரணமான மருத்துவத் துறையொன்று இயங்கும் என்று டாக்டர் வால்ஷ் கூறினார்.

இக்கப்பலில் கடமையாற்ற வரவிருக்கும் டாக்டர்கள் அனைவரும், "மக்களுக்கு மக்கள் தொண்டுசெய்ய வேண்டு"மென்ற அடிப்படை எண்ணம்கொண்ட தொண்டர்களாவர். வியாதிஸ்தர்களைக் குணமாக்குவதும், மருத்துவர்களுக்கு நவீனமான முறைகளைப் பயிற்றுவதும் இத்தொண்டர்களின் கடமையாகும். இக்கப்பலில் பொருத்தப் பட்டிருக்கும் நவீன கருவிகளனைத்தும் அமெரிக்க பொதுமக்கள் சிலரினதும், தனிப்பட்ட நிறுவனங்களினதும் நன்கொடைகளாகும்.

(தொடர்ச்சி 5-ம்பக்கம்)

# மொறிஸ் கெனடியின் நம்நாட்டு நினைவுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குரியதெனஎடுத்துக்காட்டினார். விசேஷமாக, நமது நாட்டுக்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட இயற்கை அழகைப் பயன்படுத்தி உலக உல்லாசப் பிரயாணிகளால் ஏராளமான பணம் சம்பாதிக்க இடமிருப்பதை விளக்கினார்.

● சென் வின் சென் டிபோல் சபையினர் இளைஞரைத் தம் தொண்டில் சேர்த்துக்கொள்ள வழிவகைகள் தேடவேண்டுமென்பதே இந்நாட்டுச் சென் வின் சென் டிபோல் சபையினருக்கு அவர் கூறும் முக்கிய ஆலோசனையாகும்.

மின்சாரத்தில் இயங்கும்

சென்றிக்

நீர் இறைக்கும் இயந்திரங்களையும்

மண்ணெண்ணெயினால் இயங்கும்

சென்றிக்

யூனியர்—சீனியர்

பாரம் குறைந்த

நீர் இறைக்கும் இயந்திரங்களையும்



எமது பலதரப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்களுடன் அறிமுகப்படுத்துகிறோம்

ஓட்டோஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1968ஆம் ஆண்டு மாசிமீ 24-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org